உ
ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

சிவநெறி மலர்

இதழ் 3

சித்தார்த்தி வருஷம்கார்த்திகை மாதம் 28ந் திகதி
வெள்ளிக்கிழமை [14-12-1979]

சுடர் 5

University of Jaffna Sri Lanka
RECEIVED
1980-10-07
Periodicals Division
Library

## சிவதொண்டின் நெறியே கடவுள் என சிவனடியார் நினைப்பர்

உலகில் உள்ள சமயங்கள் யாவற்றிலும் சைவநெறி எதனால் உயர்ந்தது என்றால் நெறியால் உயர்ந்தது எனவே நாம் சொல்வோம். நெறி என்றால் ஏனைய சமயத்துறைகள் எண்ண முடியாத நெறியே சைவ நெறியாகும். வேதத்தின் நெறியே சைவம் காட்டும் பாதை என்றதால் வேத நெறி தழைத்து ஓங்க மிகு சைவத்துறை விளங்க என பெரிய புராணத்து சேக்கிழார் மொழிகின்றார். வேத ஒழுக்கத்தின் பயனே சைவமாகும்.

வேதத்தை பால் அதற்கு ஒப்பிட்டால் அதனின் சுவையாவது சைவம். சைவம் என்றால் சிவசம்பந்தம் என்பது பொருள். எமது கடவுள் சிவனை சைவன் எனப் போற்றுகிறார் நாயன்மார்கள். அநாதியான சைவன் அவனே! என்று உலகில் மனித குலம் தோற்றியதோ அன்று முதற் பொருளான தலைவன் சிவன். அவனை அநாதிமல முத்த சித்துருவாயவன் என வேதங்கள் சொல்வன.

மலங்கள் மனிதனிடத்து இயல்பில் பெருகுவன. இந்த மலங்கள் தான் மனதின் மயக்கம் என்பது. காமம் கோபம் முதல் போலிக்கெளரவம் வரையும் உள்ள பல தீங்கிற்கும் காரணமாவது மலப்பற்றே. இந்த மலத்தைப் போக்கிடற்கே நாம் கோயில் செல்கிறோம் வழிபடுகின்றோம். தொண்டுகள் செய்கின்றோம்.

இதனை மாணிக்க வாசகர் தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால் என திருவெம்பாவையில் கூறி அத்துடன் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்கு மடுவில் (குளம்) புகப் பாய்ந்து எனவும் மொழிகின்றார். இது மட்டுமல்லாது அருணகிரியாரும் திரை வஞ்ச இருவினைகள் நரையங்க மலம் அழிய சிவகங்கைதனில் மூழ்கி விளையாடி சிவம் வந்து குடி கொள அகவடிவு உன் வடிவம் என; முருகப் பெருமானை சிவகங்கையில் மூழ்கி விளையாடி எழும் போது உள்ளம் உனது வடிவமாகப் பாவித்திடும் வாழ்வு தர வேண்டும் எனவே போற்றுகின்றார்.

ஆகையினாலே பெரியோர் அவர்கள் யாரும் மலம் நீங்கும் வகையையே சிந்தித்து அது எவ் வகை எனக் கூறிடும் வகைகள் காண்க. இதைப் பற்றி முன்பும் ஒரு முறை நமது தீபத்தில் நாம் குறிப்பிட்டது நேயர்களுக்கு விளங்கி இருக்க முடியும். நமது தீபத்தில் உபநிடதக் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் விளங்கிக் கொள்ளல் மிகக் கடினம் என்றாலும் அவற்றின் உண்மையாவது அகம் அதாவது உள்ளம் பிரமம் கடவுள் சொரூபம் என்பது.

இதனை சீவன் சிவசொரூபம் என அருணகிரியார் போற்றுகின்றார். ஆகவே சீவன் சிவத்தின் சொரூபமாக கருதப்பட்டால் அந்த நிலையை சாதாரண மனோ நிலையில் நான் பெறலாமோ என்றால் அது முடியாதது ஒன்று.

ஏனெனில் அந்த நிலை என்று கூடும் என்றால் நெறிப்பட்ட வாழ்வுடையார்க்கே அது கைகூடிடும். இதனை நன்கு விளங்க வேண்டும் தெளிய வேண்டும்! எத்தனையோ சதித்திட்டங்களை சூழ்ச்சிகளை வஞ்சனைகளை விழாக்களை பிரசங்கங்களை வைத்து மகிழ்கின்ற மனத்தை அல்லது புத்தியை நோக்கி என் புத்தியே இதை எல்லாம் ஏன் நீ செய்கிறாய்! எதற்காக செய்கின்றாய்! நீ ஒரு விலாசக்காரனாக இருக்க வேண்டும் என நினைந்தே இவை செய்கிறாய்! கொஞ்சம் விலாசம் உன்னிடம் இருக்கு. எந்தவிலாசமெனில! உள்ளத்துள்ள பேரின்ப விலாசம்; அந்த விலாசத்திற்கு ஒரு சிறப்பு என்ன என்றால் எவன் ஒருவனாலும் அதற்கு மேடை வைத்து விழா எடுக்க ஏலாது! காசுகுடுக்க ஏலாது. அல்லது அதைக் காட்டி காசு வாங்கவும் ஏலாது.

தப்பித் தவறி ஆருக்கும் அந்த விலாசம் மேல் ஆசைப்பட்டு அதை அடையத் தலைப்பட்டு அதைப் பெற முயன்ற வகையில் சில சித்துக்கள் தலைப்பட்டால் அதை வைத்து வியாபாரம் செய்யத் தலைப்பட்டால் அல்லது விளம்பரம் செய்யத் தலைப்பட்டால் அது அவரையும் முடித்து அவரோடு சேர்ந்தவரையும் எழுப்ப முடியாத பாழ்ங் கிணற்றில் விழுத்தும். இது உண்மை நான் திடமுடன் சொல்கின்றேன்.

இந்த அரிய பொருளாய விலாசம் பிறர் மதிப்பிற்கு அமையாது அல்லது எட்டாது. அந்த விலாசம் உலகம் உண்டோ இல்லையோ என எண்ணுறிருக்கும் எல்லாம் மறந்த நிலையில் வருவது. இதைப் பெறுதற்குத் தான் தொண்டு மூலம் என அறிஞர் நிச்சயித்துள்ளனர்.

தொண்டுகளை நெறிகள் என்று சொல்வார்கள்! அத்தொண்டுகள் யாது என்சிவனே மொழிவதாகப் புராணங்கள் தெளிவு படுத்துகின்றன. எப்படியெனில் பேசரிய பேரின்ப விலாசத்தைப் பெறுதற்குரிய பருவம் என்றால் ''நாம் இருந்துள இடம் தோறும் இறைஞ்சி நன்மை சேரும் சிவபுண்ணியம் புரியும் நலத்தால் வரும் என நீ உணர் என கூறி விட்டு பின்னரும் சிவன்புண்ணியங்களை விளக்கும் பொழுது;

ஆதலால் எமக்கு நல்ல பூந்தோட்டம் வைத்தல் அத்தோட்டத்தில் மலர் பறித்தல் மாலை கட்டுதல் சாத்தல் விளக்கிடல் மெழுகல் நம்புகழ் ஓதல் இவையேயாகும் என கடவுள் சொல்வதாக திருவாரூர் புராணத்து கடவுள் மாமுனிவர் சொல்கின்றார்.

இவைதான் நெறி எனப்படுவன இந்த நெறியைத்தான் சிவனடியார்கள் நினைப்பார். இதனை எம்பிரான் சுந்தரர் நெறியே நின் அடியார் நினைக்கும் திருக்காளத்தி உள் அறிவே எனப்பாடுகின்றார்.

காளத்தி அமர்ந்த தோன்றாத் துணையான கடவுளை அவர் பாடிய திருப்பதிகத்தை உங்கட்கு கீழே தருகின்றேன். ஏதும் மனதில் விபரீதங்கட்கு இடம் கொடாமல் அமைதியாக இருந்து ஓதிப்பணியுங்கள் ஒரு பொல்லாப்பும் நேராது.

பல காலமாக எமது நாட்டில் தேவாரங்களை நிந்திக்கும் ஒரு மனப்பாங்குடன் நம் நாடு மின் வேகத்தில் போய் விட்டது. என்னவோ தெரியாது என்ன பழியோ தெரியாது பல சண்டாளத்தனத்தில் பிராமணனே இதை உணரத் தவறி விட்டான். அந்தப் பிராமணன் என்ன செய்தான் என்றால் தான் செய்யும் பூசையைவிட மற்ற இந்த தேவாரம் இதெல்லாம் தேவை இல்லாதது என்றே நினைத்தான். ஏன் என்றால் மரமேறியள் மரம் சீவிக் கள்ளு இறக்கிகள் விற்று காசு வேண்டி பல குடும்பங்களை நாசஞ் செய்வது போல் இந்த சண்டாளப் பிராமணனும் கோயிலை தான் பூசை பண்ணிக் காசு உழைக்கும் இடம் என எண்ணி இப்படி எத்தனையோ சண்டாளத்தனம் செய்து போட்டான்.

ஐயோ தேவாரம் சொல்லுங்கோ என்று விட்டு; தேவாரம் சொல்லும் போது அவன் தேங்காய் உடைத்து ஓம் சுக்கிலாம் சொல்லி அர்ச்சிப்பான். அவனுக்கு உண்மையில் தேவாரம் என்றால் அதன்மகிமை தெரியாது.

சிறு வயசில் புராணம் படித்திட ஆசை. அதோடு கோயிலில் தேவாரம் சொல்ல ஆசை. அதற்காக சில கோயிலிலே சென்று கெஞ்சி நானும் தேவாரம் சொல்லட்டோ புராணம் படிக்கட்டோ எனக் கேட்டுத் தொண்டு செய்தேன். இவை எல்லாம் எம்பெருமானுடைய தணப்பில் புகழ் ஓதல் என்ற வகை கருதப்படும்.

அப்படியாக நான் செய்திடும் நேரத்து பல பிராமணர் அங்கு முன்பு நின்றவர் அங்கு நில்லார்கள். அங்கால் ஓடிச் சென்று நின்று கொண்டு சிலர் மூக்குத் தூள் போடுவர். சிலர் பலத்து சத்தம் போட்டு கதைப்பர். வாகனக் கொம்பை தூக்கு என்பார், தீவட்டியை ஆயத்தம் செய் என்பார். சிலர் அர்ச்சனை செய்வார். சிலர் அன்று வந்து உள்ளுக்குள் நின்ற பிராமணப் பெண்களுடன் குடும்ப நலம் விசாரிப்பார். இப்படி இப்படி எத்தனையோ அலங்கோலம் தேவாரத்திற்கு நடக்கும்.

அது மட்டுமல்லாது இந்த சண்டாளன்களுடைய குட்டிகளும் அதோடு திரு நீறு தெரியாமல் பூசிய வேறு குலத்து அம்மாமார் இருட்டில் பெற்ற பிள்ளைகளும் சேர்ந்து ஒரே கும்மாளம். சிரிப்பெங்கு கலைப்பெங்கு ஓடி ஆடி வீதி எல்லாம் சுழன்றடிக்கும். இப்படித் தங்கள் பிள்ளைகள் செய்வதை ஒன்றைச் சாட்டுக்கு வைத்து பலதின் மேல் மனம் போக்கிய தாய்மார் கண்டு ஆநந்தித்து நிற்பர்! என்றை குஞ்சு அப்பன்றை வீதியிலை சுழன்றடிக்குது என நினைப்பாரோ தெரியாது?

ஒரு கால் ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலில் நானுகவலிய எஜமானிடம் உத்தரவு கேட்டு பெரிய புராணம் படித்தேன். அப்பொழுது சில நல்ல குடும்பத்துள்ளவர்கள் வந்து கேட்பார்கள். ஒரு நாள் மாலை 4 மணி நேரம் நாம் புராணம் படிக்கும் போது சில பிள்ளைகள் வந்து முன்னுக நின்று கிட்டி அடித்து சத்தம் போட்டு விளையாடினார்கள். நான் போய் அப்பிள்ளைகளை இங்கு விளையாடாதீர் எனக் கலைத்தேன்,

அடுத்த நாள் விளையாடிய பிள்ளையின் தகப்பன் நல்ல மது வெறியில் வந்து நாங்கள் புராணம் படித்திடும் நேரம் கல்லால் எறிந்தார். அந்த எறி வந்து புராணம் கேட்டிருந்த பிராமண அம்மையின் கையில் விழுந்தது. ஐயோ இப்படி எத்தனையோ சண்டாளத்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்க நாம் அதை ஏற்று ஏற்று துன்பப்பட்ட நாள்பல. தொண்டு செய்யப் போய் மனம் வேதனை உற்ற நாள் அந்த ஒரு கோவிலில் மட்டு மல்ல பல பல கோயிலிலும் உண்டு.

மாவிட்டபுரத்தில் சாதிக்கலவரத்தால் கோவில் திருவிழாக் காலத்தில் பெரும் குழப்பநிலை. அப்போது நான் வஞ்சமின்றி எண்ணினேன் இந்த ஒரு நிலையில் கோயில் கும்பிடச் செல்வாருடைய மனதில் நன்று தீது என்ற வகைபாராது மனம் வேதனைப்பட்டபடி இருக்கும். பலாத்காரத்திலே இரு பகுதியும் நினைந்து நிற்கும். இந்த ஒரு நிலை அரசியல் கட்சிக்காரருக்கு பெரும் வாய்ப்பைக் கொடுக்கும்: அடுத்த தேர்தலிற்கு மக்கள் ஆதரவைப் பெற இதை ஒரு சாட்டாக வைத்துப் பெரும் பிரசாரமும் குழப்ப நிலையையும் மேலும் மேலும் தூண்டி விட அவர்கள் முனைந்தபடி இருப்பர்

தமிழர் கூட்டணியாதல் அல்லது வேறு எந்த அரசியல் கட்சியாதல் கோயிலில் நடைபெற வேண்டிய புண்ணிய நிலைகளிலும் பார்க்கத் தங்கள் கட்சி நலனையே கருதுவர்: கோவில் உற்சவ நிலை பற்றி அவர்கள் கருதார்கள். இது எமது சைவநெறியில் பெரும் பழுதை விளைவிக்கப் போகின்றது,

ஆகையால் நாம் சென்று அங்கு கந்தபுராணத்தை விரிவுரையாக ஓதுவோம். நாம் நல்ல பத்திமையுடன் ஓதினுல் சிலராதல் அமைதியுடன் கேட்பர். அது ஒரு தவமாகும். அந்தத் தவச் செறிவு அங்குள்ள அவத்தின் பழுதுகளை நீக்கி ஓர் தெளிந்த நிலையை உருவாக்கும் என எண்ணிச் சென்று அக் கோவிலில் எஜமானுக இருந்த துரைச்சாமிக் குருக்கள் அவர்களின் ஆசி உடன் நான் எனது பணியைச் செய்தேன். நல்ல ஆதரவும் கிடைத்தது. அதே வேளை பொருமை உள்ளங்கள் பல பிரச்சனைகளைத் தூண்டி மர நிழலைப் பேய் எனக் காட்டி நம்பப் பண்ணுவார் போல அங்கு நமக்கு ஆதரவு தந்த பெருமக்கள் உள்ளத்தை பழுதாக்கிடலும் நாம் பார்த்தோம் இனி எனது தொண்டு காணும். கோயிலும் சுமுகமான ஓர் சாந்த நிலைக்கு வந்து விட்டது. என எண்ணி தொடர்ந்து 2 வருடங்களாக என் பணியைச் செய்த பின் நிறுத்திக் கொண்டேன்;

என் பணியைத் தவருகக் கருதி நான் கோயிலிற்கு ஓர் இடைஞ்சல் என் கால் அடித்து முறிக்க வேண்டும் என அங்குள்ள அந்தணர்களே வெகுள வேண்டிய நிலை அங்கு இருந்தது. ஏனைய குலத்தவர் என் மீது பொழிந்த வசைமாரிக்கு அளவே இல்லை.

இதை எல்லாம் நாம் குறிப்பிட வேண்டிய காரணம் நமது மக்கள் சமுதாயம் தேவாரங்கட்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கின்றன என்பதை காண்பிக்கவேயாகும்.

கீழே தரப்பட்ட தேவாரத்தை உண்மையாக நீங்கள் படித்துப் பாருங்கள். இன்று தமிழ்க் கலாநிதி என்றும் பேராசிரியர் என்றும் பண்டிதமணி என்றும் பட்டதாரிகள் என்றும் பண்டித வித்துவான்கள் என்றும் கல்வித்துறையில் பல உயர்ந்த நிலைகளைப் பெற்றுள்ளீர்கள். இந்த கல்வித்துறையின் பட்டத்தால் உயர்வு உங்களுக்கு என்ன தேடித் தந்துள்ளது. மிலேச்ச நாகரீகத்தின் வழிப் போகும் ஓர் அரசாங்கத்து நல்ல உத்தியோகத்தை நல்ல சம்பளத்தை பெற ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. உங்கட்கு உயர்வை பொருளாதாரத்தைவிருத்தி ஆக்கிக் கொடுத்ததுமல்லாமல் பிறரையும் அவ்வழிப்படுத்த உங்களுடைய கல்வி உதவியாய் இருந்தது. இந்த ஒரு பயனையே பெற்றீர்கள். இது அல்லாது வேறு என்ன பயன் நீங்கள் கண்டீர்கள்.

ஆனுல் எம்பிரான் சுந்தரருடைய இப்பதிகம் கல்வித்துறையில் உம்மை உயரவைக்க உதவுகின்றதோ என்றுல் அது இல்லவே இல்லை. பேராசிரியரையும் அதற்கு மேற்பட்ட பேராசிரியரையும் உபவேந்தரையும் கலாநிதிகளையும் இவையன்றிஎந்தக் கல்விமானையும்கல்வியோ தொண்டோபெரிதென சிந்திக்க வைக்கின்றது.

வேறு என்ன உணர வைக்கின்றது அது தான் கேள்வி? பிறவியின் பேற்றை உணர வைக்கின்றது. படித்து பட்டம் பெற்று பட்டதாரி ஆவதுமன்றி ஓர் சிவனடியாராக மாறி உண்மை தெளிய உதவுகின்றது இப்பதிகம்.

பேராசிரியர்களே பட்டதாரிகளே உங்கள் கல்வியால் என்ன பயன் பெற்றுள்ளீர்கள் என்று தயவு செய்து சிந்தியுங்கள். உங்கள் உழைப்புக்கு உறுதியானதே அன்றி உண்மைக்கு உறுதியானதா? உங்களுடைய உயர்வை நீங்கள் கைவிட முடியாத படி எத்தனை காலமாக எங்கள் சமய நெறியில் புகுந்து உங்கள் போலிக் கௌரவத்தை நாம் பாதுகாக்க நாங்களும் சம்பம் பரப்புகின்றோம். தொண்டு செய்கின்றோம். என்று எத்தனை விழா எடுத்தீர்கள் எத்தனை பாராட்டுகள் வைத்தீர்கள் எத்தனை போலிச் சந்நியாசிகளை கௌரவித்தீர்கள்.

ஆனுல் நாம் கீழே தருகின்ற தேவாரப் பதிகத்து சொல்லப்படுகின்ற சில நெறிகளேனும் உங்கள் யாரிடமும் உண்டா தயவு செய்து பதில் தாருங்கள். இவ்வளவு அருமந்த தேவாரம் எங்கள் நாட்டிலே இருக்க இவைகளைப் பற்றி எக்காலமும் நீர் சிந்தித்திருந்தால் உங்களுடைய நடத்தை மூலம் நிரூபித்து காட்டுவீரா?

மேற்கு நாட்டவன் எம் நாட்டைக் கைப்பற்றி நன்கு தன்னுடைய ராஜ தந்திரங்களை பரப்பி நல்ல உத்தியோகங்களை கொடுத்து பட்டங்களை கொடுத்து உங்களை ஆள நீங்கள் அவன் காலடியில் தாழ்ந்து பஞ்சமா பாதகங்களையும் கூசாது செய்யும் அவன் காலடியில் தாழ்ந்து நீங்களும் உங்கள் உத்தியோகங்களை பாது காக்கும் பொருட்டு எங்கள் நாயன் மாரின் தேவாரத்தை மதியாது இருந்தீர்களே: அது வெறும் சும்மா தேவாரம் என நக்கல் செய்தீர்களே? இது இல்லை எனச் சொல்வீர்களா? மேற்கு நாட்டுத் தத்துவ ஞானிகளின் கொள்கைகளை எடுத்துக் கொண்டு எங்கள் நாட்டின் தேவாரத்தில் ஏதும் சிறப்பு இல்லை. என எண்ணினீர்கள். பிரசாரம் செய்தீர்கள் பெருமைப்பட்டீர்கள்.

மேற்கு நாட்ட எந்த தத்துவ ஞானியும் சரி இந்த சுந்தரபெருமானுடைய தேவாரத்தின் ஒரு கருத்தையாவது பிரதிபலிக்கக் கூடிய ஒரு பாடல் செய்துள்ளாரா இயற்றி உள்ளாரா காட்டுங்கள், ஆகவே நமது உயர்ந்த சிறப்புக்களை நாமே அழித்தொழித்தோம். சிறப்பில்லாத செயல்களை மேடையில் ஏற்றினும் சிவதொண்டின் பெருமையையுணரத் தவறினேம். சிவதொண்டு செய்வது கௌரவக் குறைவு என்றோம். ஆலயங்களை நிர்வகிக்க முன் வந்தோம் ஆலயங்களில் தொண்டு செய்வதற்கு பின் தங்கினேம். தொண்டு செய்வானை கூலி ஆளன் என்றோம். பிண்டான வழி பொருள் சேகரித்த பணக்காரர்கள் கோயில் திருப்பணிக்கு காசு வேண்ட இவர் ஒரு பெரிய பெருமான் என அச் செல்வந்தரைப் போற்றினேம். இதற்கு எடுத்துக் காட்டாக நாம் சொல்வது முற்றிலும் உண்மை என்பதற்கு திருக்கேதீச்சர திருப்பணிச் சபையாரின் நடத்தையைப் பாருங்கள்.

அடுத்து தொண்டிற்கு விழா இல்லை, தொண்டிற்கு மேடை இல்லை தொண்டிற்கு கௌரவம் தேவையில்லை. அடியார் செய்யும் தொண்டின் குற்றேவல்களை எம்பெருமான் அறிவான். அவன் அறிவானே அறியமாட்டானே என்று ஐயப்பாடியாருக்கும் வேண்டியதல்லை.

ஆட்பாலருக்கு அருளும் ஆதி தொடக்கம் நிகழ்ந்து வரும் மாண்பின் செய்கைகளும் அவைக்கு அளவே இல்லை. அதைப் பற்றி உங்கட்கு பேச்சு வேண்டாம். அவன் திருவடித் தொண்டு செய்து வேண்டியதைக் கேளுங்கள். அவன் ஒரு தலையாய நிலையில் உங்களை வைப்பான் என்கின்றுர் எம்பிரான் சம்பந்தர்.

இதைத் தான் சுந்தரர் பெருமானும் களத்தியில் சென்று இறைவனைக் கண்டு பாடியருளும் போது அவரை நோக்கி என் அறிவே என் குருவே உன் குற்றேவல் செய்வேன்என பணிவுடன்சொல்கின்றுர். அருமந்த ஒரு பிறவியில் நல்ல நிலையை உருவாக்குவதற்கு இப்பதிகம் ஒன்றே காணும்.

உலகில் நெறிதான் பெரிது. வேறு எதுவுமே பெரிதல்ல, நெறி அல்லாத போலிக் கௌரவ செயல்களை விடுத்து உங்களையும் உங்களைச் சார்ந்தாரையும் நல்நெறிப்படுத்துவதற்கு இத்தேவாரம் ஒன்று உண்மையில் போது மானது. எங்கள் ஆலயங்கள் எல்லாவற்றிலும் மேடைப்பேச்சு பிரசங்கம் என்ற இந்த பேதைத் தன்மைகளைஎல்லாம் அகற்றி விட்டு எம்பிரானுடைய குற்றேவல் தொண்டுகளை கபடமில்லாது செய்தொழுகி யாவரும் நன்நிலைப் படுங்கள்.

வஞ்சனை, கபடம், கொலை, முதலிய பாதகங்கள் நிரம்பும் செயல்கள் யாவையும் நீக்கி உண்மை உணர வைக்கின்ற அறிவே கடவுள் என்பதை யாவரும் உணருங்கள்.

திருச்சிற்றம்பலம்

**செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே**
**வண்டா ருங்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே**
**கண்டார் காதலிக்குங் கணநாதன்எங் காளத்தியாய்**
**அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.**

போரிடும் வலி கொண்டு ஆடும் இடபத்தை வாகனமாக உடையவனே! சிவனே எனது அருமையான செழுந்சுடரே! வண்டுகள் மொய்க்கும் பூச்சூடிய உமையம்மையாரை ஒரு பாகமாக வைத்து மகிழ்ந்தவனே. உன்னைக் கண்டார் வேறு பொருள் எண்ணுது உன்னையே காதலிக்கும் படி அருள் வடிவாய் நிறைந்த சிவ கணங்கட்கு நாயகனே எம் காளத்தியில் அமர்ந்தவனே எல்லா அண்டங்களுக்கும் தலைவனே உன்னை அல்லாது இனி ஒரு பொருளை அறிந்து நான் கும்பிடமாட்டேன்.

பல வேதாந்தம் பேசி அழுக்குடைய அகந்தையால் நிறைந்து பல பல பிதற்கும் போலிகளே தயவு செய்து உங்களுடைய வீண் பேச்சுக்களை பேதமையை விட்டு இந்த தேவாரத்தை சிந்தியுங்கள், கண்டார் காதலிப்பார் காதலிக்கும் படியானவன் எம் கடவுள் சிவன். அப்படியான ஒரு பொருளுக்கு மிஞ்சி எதுவுமே இல்லை அதை நீங்கள் அறியுங்கள்.

சிவனுக்கு மிஞ்சியது பிரமம் எனப் பேசுகிறுர் சில பேதைகள்: அந்தப் பேதை வேதாந்திகளை உலகமக்களே நம்பாதீர். கொலைத் தொழிலும் கொடும் புலைத் தொழிலும் மிகுந்த வேடர் குலத்துதித்த திண்ணன் எனப் பெயர் கொண்ட கண்ணப்ப நாயனுரை முற்றிலும் தன் மீது காதலிக்கப் பண்ணி தனது சுற்றம் தனது தொழில் தன்னுடைய சுகம் தன்னுடைய வாழ்வு அத்தனையும் நினையாமல் அன்புருவாக்கி அருள் வழிக்கே ஆட்கொண்டவன் காளத்தி நாயகன் என்றதால் கண்டார் காதலிக்கும் காளத்தி என்கின்றுர். இதை காளத்தியில் உள்ளாரும் தெளிவாரோ தெரியாது.

காளத்தியில் சுவாமி காற்றின் வடிவமாய் இருக்கிறுர். அவருடைய பேரருள் நிலையை எங்காளால் இங்கு எழுதிக் காட்ட முடியாது. தவம் நிறைந்த பெருமக்களால் தான் அதை உணர முடியும். அம்பாள் பெயர் ஞானப்பூங்கோதை. 1

**இமையோர் நாயகனே இறைவாவென் இடர்த்துணையே**
**கமையார் கருணையினுய் கருமாமுகில் போல்மிடற்றுய்**
**உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்**
**அமைவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.**

# இதுவா சிவநெறி எனக் கேட்கிறுர் இளைஞர்

## சம்பந்தப்பட்டவரிடம் கேட்கட்டும்

ஜே . ரவீந்திரன்
பொற்பதி வீதி

கனம் தங்கிய உயர் திருநல்லையா அவர்கட்கு நமஸ்காரம். தங்களின் தீபம் எனக்கு விரைவாகக் கிடைத்து வருகின்றது. நன்றி. நான் தங்களுக்கு அனுப்ப வேண்டிய வருட சந்தா நான் தங்களுக்காக அல்ல சந்திரனின் வளற்சிக்காக? அனுப்புகின்றேன்.

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப்பேண திருவருள் கொண்டது எமது தீபம் என்பது யாராலும் மறக்கமுடியாத காலம்.

தங்களின் பத்திரிசை நான் தினம்தோறும் பார்த்து வரும் தீபத்தில் எத்தனை நன்மை காண முடிகின்றது எவ்வளவு, பத்தி சீலம் கூட கடைப்பிடிக்கக் கூடிய நன்மை. அதில் சில வார்த்தைகள் நான் உயர்திரு நல்லையா அவர்களிடம் நான் சந்தேகம் கேட்க வேண்டியநிர்ப்பந்தம் உண்டாயிற்று. அதை தாங்கள் கனடிப்பாக சிரமம் என பார்க்காமல் சைவத்தின் வளர்ச்சிக்காக பாடும் வண்ணம் கேட்கிறேன். நான் பாடசாலையில் க பொ த உ பரீட்சை செய்து வருகிறேன் நான் ஆலயங்களின் மிக நம்பிக்கை உடையவன் கடவுள் நம்பிக்கை. அதேபோல் குருநம்பிக்கையும் நான் உடையவன். ஆனுல் எல்ல ஆலயங்களிலும் சென்று வழிபாடு செய்து வருபவன் நான் கடந்தசில தினங்களுக்கு முன் ஓர் குருக்களின் மகன் அந்தக் குருக்கள் ஆனைக்கோட்டை மூத்தனுர் கோவில் பிரதம குருவாக இருந்தார் அவர் தற்போது அங்கு இருந்தது. வேலை நீக்கம் செய்யப்பட்டு விட்டது. அவர் பெயர் குறிப்பிட நான் விரும்பவில்லை. காரணம் எங்கள் சமயத்தை வளர்க்கும் குரு. அவரின் மகனுக்கு கடந்த வருடம் அதே சந்நிதானத்தில் வைத்து பலசாதகர்கள் பல வாத்தியார்கள் எல்லோரும் வைத்து அவரை குருவாக்கி (ஆச்சாரியாபிஷே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களுக்கெல்லாம் நாயகனே இறைவா என் இடர்களைத் தீர்ப்பதற்கு ஒரு பெரும் துணையானவனே இவ்வளவு என்று எழுதிக் கூட்டொணாத சிறப்பமைந்த கருணையினுய் கறுத்த பெரிய முகில் போலும் கண்டமுடையாய் உமையம்மையாரை உமது திருமேனியில் ஒரு கூருக உடையாய் உலகம் சிறக்க ஒரு உருவம் கொண்டவனே திருக்காளத்தியில் சிறந்த அமைவாக அமைந்தவனே அருள் ஒளியே உன்னை அல்லால் நான் இனி ஒரு பொருள் உண்டென்று நினைந்து கும்பிடமாட்டேன்.

காளத்திக்கு அமைவு சுவாமி என்றமையால் காளத்தியுள் அமைவே என்ருர்; இவை எல்லாம் ஐந்தும் ஆறும் அடக்கி உள்ள பெருமக்களால் தெரியப்படும், நான் என்னென்று இதற்கு விளக்கம் தரலாம். மிலேச்ச நாகரீகம் பெரிதென நினைக்கும் பேதையர் கூட்டத்து இதைப் பற்றிப் பேசினுலும் பெரும் பிழை என்னில் வருமோ என அஞ்சுகிறேன். 2

## படையார் வெண்மழுவா பகலோன்பல் உகுத்தவனே
## விடையார் வேதியனே விளங்குங்குழைக் காதுடையாய்
## கடையார் மாளிகைசூழ் கணநாதன்எங் காளத்தியாய்
## உடையாய் உன்னையல்லால் உகந்தேத்த மாட்டேனே.

சிறந்த படையாக விளங்கும் வெண்மை பளிச்சிடும் மழுவாயுதம் உடையவனே சூரியனுடைய பல்லை நொறுக்கி எறிந்தவனே இடப மீது எழுந்தருளும் அந்தணனே விளங்குகின்ற தோடணிந்த காது உடையவனே கடைகள் நிரம்பிய மாளிகைகள் புறத்தே சூழ சிறந்த அமைவுடன் விளங்கப்படும் கணங்கட்கு நாயகனுகி எங்கள் காளத்தியில் அமர்ந்தவனே என்னை உடையவனே உன்னை அல்லாது இனி ஒருபொருளை மகிழ்வுடன் கும்பிடமாட்டேன்:

கும்பிட ஒரு பொருள் உண்டு என்ருல் அது நீ தான். கும்பிடும் போது கவலை இல்லாமல் கும்பிடுவது என்ருல் அது உன்னைத் தான். சுவாமியை வணங்கும் போது கவலை இலாது கும்பிட வேண்டும். கவலை நீக்குவானைக் கும்பிடும் போது உள்ளம் பரவசப்படட்டும், ஆநந்தம் நிறையட்டும்: சித்தத்தில் ஏதும் பதைப்பு தேவையில்லை. 3

## மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
## குறியே என்னுடைய குருவேஉன்குற் றேவல்செய்வேன்
## நெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்
## அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

மான் மறி சேர்ந்த கையினை உடையவனே மதம் பிடித்த பெரு யானையை உரித்து தோலைப் போர்த்தவனே என் உள்ளம் நினைக்கும் குறியாக உடையவனே என்னுடைய குருவே உனது குற்றேவல் அத்தனையும் நான் செய்வேன். உனது குற்றேவலாகிய தொண்டின் நெறியே என்றும் நினைக்கும் நின் அடியார் உள்ளத்து எழுகின்ற திருக்காளத்தியுள் அறிவாக இருக்கின்றவனே உன்னை அல்லால் நான் இனி ஒரு பொருள் உண்டென்று அறிந்து போற்றமாட்டேன்.

குற்றேவல்களே நெறிகள் எனப்பட்டன உயர்ந்த நெறிகளாவன ஐந்து புலன்களை அடக்கல் காமக் குரோதம் முதலிய ஆறு குணங்களை ஒடுக்கல் இவை கருமமாம். இவைகளை அடக்குவதற்கு அமைவாக வரும் நிலைகள் தான் தொண்டுகள் எனப்படுவன. தொண்டுகள் தான் உண்மை நெறியை வருவிக்கும். பஞ்சப் புலன்களை அடக்குவதற்கு ஒரே வழி சிவதொண்டு; சிவதொண்டில் உயர்ந்தது நந்தவனப்பணி,

காலை எழுந்து கை கால் முகம் கழுவி கோல மலரெடுத்து குருபாதம் கும்பிடுங்கள். குரு தான் சிவம், கண்கண்ட கடவுள் குரு ஆகும். காணுததைக் காட்ட வல்லது குரு,

நெறிகளை நினைக்கும் அறிவு சிவன். அது தான் கடவுள். உயர்ந்த நெறிகளைப் பற்றும் அறிவு தான் சிவமயமாகின்றது என்பதை நன்ருகத் தெளியுங்கள் அதை விடுத்து வேறு வேருன புகழ் பட்டம் பதவி விழா ஆரவாரம் முதலியவை மாண்பலா நெறிகள். இவை எவையும் சிவசம்பந்தம் உடையன அன்று: இந்தப் பதிகத்திற்கு விசேட உரையாக எமது முன்னுரை அமைவதை காணுங்கள்: ஆறுமுகநாவலர் போன்ற பேதையரை குரு எனப் போற்றும் பாவிகளே பாதகரே எவ்வளவு பழியை நீங்கள் சைவ உலகிற்கு செய்து விட்டீர்கள் சிந்தித்துப் பாருங்கள். 4

## செஞ்சேல் அன்னகண்ணுர் திறத்தேகிடந் துற்றலறி
## நஞ்சேன் நான்அடியேன் நலம்ஒன்றறி யாமையினுல்
## துஞ்சேன் நான்ஒருகால் தொழுதேன்திருக் காளத்தியாய்
## அஞ்சா துன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

சிவந்த வண்ணமாகி சேல் மீனைப் போலும் கண்களை உடைய பெண்கள் திறமே நினைந்து அவர்களுடைய இன்பத்தையே நினைந்து அந்த இன்பத்து அழுந்தி அது கிடையாத போது அலறி துயரப்பட்டு வாடினேன். இது பல காலம் நிகழ்ந்து விட்டது நான் உன்னுடைய அடியவன், இதேன் இப்படி என்ருல் நலம் எது என்ற ஒன்றை அறியாமையால் வந்தது. உனது அருளால் உண்மை புலப்பட்டுக் கொண்டேன். இனி அந்தத் துறையில் மூழ்கேன். அதை மறந்தமையால் நான் இனி இறவேன்: நான் உன்னை ஒரு கால் தொழுதேன்: திருக்காளத்தியில் இருந்து அஞ்சாது அருள் புரியும் தெய்வமே உன்னை அல்லாது அறிந்து வேறெருவரைக் கும்பிடமாட்டேன்.

பெண்கள் இன்பத் துறை நீங்கினுர்க்கு பேரருள் தலைப்படும் நிலை தாமாக வந்திடும். பெண்கள் இன்பத் துறையில் அழுந்த வைத்தல் அறியாமையே. இதை மாணிக்கவாசகரும் ஆறு கோடி மஜா சத்திகள் என கூறிடுவது காண்க. 5

## பொய்யவன் நாயடியேன் புகவேநெறி ஒன்றறியேன்
## செய்யவ னுகிவந்திங் கிடர்ஆனவை தீர்த்தவனே
## மெய்யவ னேதிருவே விளங்குந்திருக் காளத்திஎன்
## ஐயஉன் றன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

நாயிலும் கடை கெட்டவன் உனது அடியேன் நான். பொய்மையே உடையவன் நான் புகுவதற்கு ஒரு நெறி அறிய மாட்டேன். அவ்வாருக உலகப் பற்றில் அமிழ்ந்திய என்னை செம்மை உடைய ஒரு முனிவனுக வந்து திருமணப் பந்தலில் வைத்து என்னை ஆட்கொண்டு திருமணம் செய்திருந்தால் பின்னுல் வரக்கூடிய இடர் அத்தனையும் நீக்கி அருள் புரிந்தவனே. என்றும் உண்மைப் பொருளானவனே, திருவே என்றும் விளங்கும் காளத்தியில் இருக்கும் என் ஐயா உன்னை அல்லால் இனி ஒருவரை அறிந்து நான் கும்பிட மாட்டேன்.

திருமணப் பந்தலில் வைத்து ஆட்கொண்டதை இங்கு குறிப்பிடுகின்ருர்: சுவாமி அங்கு திருமணப் பந்தலில் வரும் போது வைதிகம் மூத்த வடிவாக வந்தார் என்பது இங்கு குறிப்பிடப்படுகின்றது. செய்யவன்என்பதின் பொருள் அது தான் பெரிய புராணம் வைதீகம் மூத்த வடிவேயோனெனக் குறிப்பிடுவது காண்க.

திருமணத்தில் [illegible]

கம்) செய்தார்கள் பின் அவர் எங்கள் இந்துமதம் சமயம் எல்லாவற்றுக்கும் அவரும் அங்கம் போல் உடம்பில் இருக்கும் உறுப்பு எத்தனை வகை கொண்டதோ அதேபோல் அவரும் கடவுளின் குரு. எங்கள் குருவாக பல பெரியாரின் முன்னிலையில் ஓர் சிவாச்சாரியாராக நியமிக் பட்டார் அந்த நிலையில் நானும் போயிருந்தேன் எனக்கு அழைப்பு விட்டார்கள் நான் அவரின் உற்ற நண்பன் ஆனபடியால் நானும் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் உண்டாயிற்று பின் நான் அவர்களைப் பார்த்து அதன் பின் அவரின் பாதத்தை வணங்கி அவரின் கரங்களினுல் வீபூதிப் பிரசாதம் பெற்று நான் வீடு சென்று விட்டேன். கடந்த சில தினங்களுக்கு முன் அவர் என்னுடன் வந்து, (லோங்ஸ்) பெல்பட்டம் அணிந்து என்னை வந்து கேட்டார் வாடா மச்சான் யாழ்ப்பாணத்தில் ரீகலில் நல்ல சோ ஓடுகின்றது போய்ப் பார்ப்போம் என்று. எனது அம்மாவிடம் கேட்டேன் அம்மா நான் படம் பார்த்துவிட்டு வருகிறேன் அம்மா கேட்டா யாருடன் படம் பார்க்க போகிருய் என்று நான் ஆனைக்கோட்டை ஐயாவுடன் என்றபின் என் தாயர் என்னை பேசிவிட்டார். நீ எப்படி அந்த குருக்களுடன் போகலாம் என்று. நான் அதைஅவரிடம் கூறினேன் அந்த ஐயா என்னை பேசிவிட்டார் நான் பின் அவரின் வீட்டுக்குச் சென்று அவருடன் பேச எண்ணினேன் அவர் கூறினுர் தன்னுடன் பேசு வேண்டாம் என்று கூறிவிட்டார் இது நீதியா அல்லது அநீதியா என்பதை தாங்கள் நன்குணர்ந்து என்ன செய்ய வேணுமோ அதை நீங்கள் செய்யவும்.

சுபம்

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
சோ ரவீந்திரன்

# கலியாணக்கோவில் ஐயர்
## மனைவிக்கு காலாலும் கையாலும்

யாழ்ப்பாண நாட்டிலே கலியாணத்திற்கு ஒரு கோவில் ஒன்ருக நல்லூரில் ஓர் சிவாலயம் உண்டு. அந்த கோவிலில் பெரும் மதிப்புடைய குடும்பங்கள் கலியாணக் செய்வர்.

தற்பொழுது அந்தக் கோவிலில் கலியாணம் செய்வதற்கு குறிக்கப்பட்ட நாளில் "புக்கிங்" நிறைந்ததால் இனி ஏலாது எல்லாம் புக் பண்ணியாச்சு என்று சொன்னதால் பெரும் கவலையுடன் இனி எந்தக் கோவிலில் என்று விசனமுடன் கோவிலில் வைத்துக் கலியாணம் செய்ய விரும்பியவர்கள் கவலைப்பட்ட வார்த்தைகள் என் காதில் விழுந்தது. என் காது கேட்டதே ஒழிய வாய் பேசவில்லை, மனம் மட்டும் எடே இந்த ஐயரின்கோவில் எழும்பின எழுப்பம் என நினைத்தது.

இந்தக் கலியாணக் குருக்கள் முன்புதான் கலியாணம் முடித்து சில நாளில் தனது மனைவியுடன் ஓர் உற்சவ காரணமாக தனது அத்தையின் வீட்டில் வந்து இருந்தவர். ஒரு நாள் இவருடைய அத்தையும் அவருடைய மகனும் மிகு கவலைக் குறியுடன் காணப்பட்டனர். அந்தக் கோவிலில் சில தொண்டுகள் செய்கின்றபடியால் நான் அங்கு அவர்களை காணப் போவதுண்டு:

குறிப்பிட்ட தினத்தன்று கவலையுடன் இருந்த அவர்களை நோக்கி என்ன ஐயா இன்று கவலையுடன் இருக்கிறீர்கள் என்றேன். அந்த ஐயர் தனது அந்தரங்கமான விடயங்களையும் என்னிடம் சொல்பவர். ஆதலினுல் அவர் என்னை நோக்கி தம்பி இன்னுரை எனது உற்சவத்திற்கு அழைத்தனுன்: ஆனுல் அவர் என் வீட்டில் வைத்து அந்தப் பிள்ளையை (மனைவியை) ஏதும் இரக்கமில்லாமல் காலாலும் கையாலும் இன்று அடித்துப் போட்டான், அது நடந்த நேரம் தொடக்கம் எனக்கு பெரிய வேதனையாய் இருக்கிறது என்ருர்.

நான் சொன்னேன் ஐயா மிருகத்தனமாக மனிதன் நடக்க வெளிக்கிட்டால் பிறகு யாருடைய சொல்லையும் அவன் மதியான். அவனுக்கு தனது செயலே சரி என்ற எண்ணம் தலைப்படும். பாவம் அந்தப் பெண் என்ன செய்யும் நாங்களும் ஏதும் சொன்னுல் சொன்னத்திற்காக இன்னும் இரண்டு கூட விழும். பேசாமல் விடுவது தான் நலம் என்றேன். அவரும் ஒரு பெருமூச்சுடன் ஒன்றும் பேசாது யோசித்தபடி இருந்தார்.

கந்தபுராணத்து கச்சியப்பர் இந்த உலகில் எக்காரணம் கொண்டும் திருந்தாத மக்களைப் பற்றிச் சொல்கின்ருர். அவர்கள் கொடுமைக்கு எல்லையாகி வரம்பாகி முடிவில் எல்லையற்ற துன்பத்தை பின் அனுபவிப்பர் என்கின்ருர். அவர் தான் தந்தை தாயரை சிறு குழந்தைகளை பெண்களை சைவவிரதம் பூண்ட முனிவர்களை அடியார்களை மேல் நெறி ஒழுகுவாரை வேத நெறிப்படி தொழில் செய்யும் பிராமணரை அடித்து துன்புறுத்துவார்களே என்றும் திருந்தாத மக்கள் என்கின்ருர்.

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பர் கோவிலை கலியாண மேடையாக்குவதில் என்ன தவறு ஒன்றுமில்லை என்றது அன்று சிறு வயதிலே இந்த குருக்களுக்கு தோன்றிவிட்டதல்லவா.

# அடியின் வேகத்தில்
## தாயும் மனைவியும் மக்களும் ஓடினர்

இன்னுமொரு குருக்கள் கோவிலில் கூசாது முன் முகப்பில் மாப்பிளை பெண்ணை வரவேற்க கும்பமும வைத்து வரவேற்று கலியாணம் செய்பவர். கொக்குவிலில் இருப்பவர். இவர்க்கு ஒரு முறை கோபம் வந்தது. வந்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதில் இருந்து தப்பமுடியாது. பேரப் பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு திரியத் தான் சொல்லும். ஆனமையினல் இடர் தீர்த்தவனே என்கின்ருர். பின்னல் வருவதை முன்னல் உணர்ந்து வழி காட்டுவது தான் தடுத்தாட் கொள்வது. இதை அற்புதமாக சேக்கிழார் பெரிய புராணத்தில் சொல்கிருர். 6

## கடியேன் காதன்மையாற் கழற்போதறி யாதஎன்னுள்
## குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம்குழகா
## முடியால் வானவர்கள் முயங்குந்திருக் காளத்தியாய்
## அடியேன் உன்னையல்லால் அறியேன்மற் றொருவரையே.

ஐயோ பொல்லாத மூர்க்கனேன் தேவரீரிடத்து அன்பாகி செந்தாமரை போலும் திவ்விய திருவடிகளை கணப்போது அறியாத என்னுள்ளும் குடியாகக் கோயில் கொண்ட குளிர்ந்த விரிந்த சடையுடையவனே! குண்டலம் அணிந்த காது உடைய என் கடவுளே தேவர்கள் வந்து முடி சாய்த்து வணங்கும் திருக் காளத்தியில் உள்ளவனே அடியேன் உன்னை அல்லாது மற்றொருவரை நான் அறியேன்.

இருமைக்கும் பொதுப் படை ஒருவராக நின்றமையின் குருபரனை (சிவனை) உன்னை அல்லாது வேறு யாரையும் அறிந்து என்னக்கென்ன பிரயோசனமாவது என்றதால் உன்னை அல்லாது மற்றொருவரை அறியேன் என்கின்ருர். கடியேன் என்றது இரக்கமில்லாத நெஞ்சத்தைக் குறித்தது. பிராமணரிடத்து பொதுவாக இரக்கமிலாத நெஞ்சம் தலைப்படுவது ஆன தன்மையினலே தன்னையே கடியேன் என்று சொன்னர். எவர்க்கும் மூர்க்கமான குணம் நீங்கினலன்றி உண்மைப் பொருளை காணமுடியாது. மூர்க்கம் இருக்கும் தனையும் அன்பு வராது ஆசையினல் காதன்மையால் கணப்போது அறியாத என்னுள் என்ருர். சுவாமி உள்ளத்தே வந்து உணர்த்திக் காட்டினலன்றி எவரும் நெறி அறிய மாட்டார். என்னுள் குடியாய்க் கொண்டவனே என்பது அது தான். 7

## நீருர் மேனியனே நிமலாநினை அன்றிமற்றுக்
## கூறேன் ஆவதனுற் கொழுந்தேயென் குணக்கடலே
## பாருர் வெண்டலையிற் பலிகொண்டுழல் காளத்தியாய்
## ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே.

திரு நீறு நிறைந்து விளங்கும் மேனியுடையவனே நின்மல சொருபனே உன்னை அன்றி மற்ற ஒருவனைக் கூறேன். எனக்கு நன்மையாகக் கூடிய ஒரு கொழுந்தே என் குணக் கடலே. பருந்து நிணம் தின்னும் ஆசையால் வட்டமிட்டுச் சுழலும் வெள்ளை மண்டை ஓட்டில் பிச்சை கொண்டு உழன்று திரியும் காளத்தியில் இருப்பவனே என்னுடைய தலைவா பெருவலி பூண்டவனே உன்னை அல்லால் இனி ஒருவரைக் கும்பிட மாட்டேன்.

காளத்தியில் சுவாமி காதல் மிகுந்த அன்புருவாக இருக்கின்ருர். எல்லாப் பற்றையும் அறுத் தெறியும் பெரும் பற்றுக அங்கு இருக்கின்ருர். அந்த இன்பத்தை கண்டு கொண்டார், அவ்வின்பத்தை மறந்திருக்க முடியாது அதை அன்றி வேறென்றையும் எண்ண முடியாது ஆன தன்மையினலே உன்னை அன்றி வேறென்றைக் கூறேன் என்கின்ருர் உனது அன்புருவை கண்டபின் வேறு கூறி எனக்கென்ன பிரயோசனம் என்றதால் ஆவதனல் கூறேன் என சொல்கின்ருர்.

நான் உன்னை அல்லாமல் வேறொருவரைக் கூறி என்ன பலன். கொழுந்து போல் சுடராகி உள்ளத்தில் நிற்கின்ருய். குணங்கள் எல்லாம் நிறைந்தவன் நீ என்றமையால் குணக்கடல் என்கின்ருர். 8

## தளிர்போல் மெல்லடியாள் தனைஆகத் தமர்ந்தருளி
## எளிவாய் வந்தென்உள்ளம் புகுதவல்ல எம்பெருமான்
## களியார் வண்டறையுந் திருக்காளத்தி யுள்ளிருந்த
## ஒளியே உன்னையல்லால் இனிஒன்றும் உணரேனே.

மான் தளிர் போலும் மிருதுவான திருவடியுடைய உமையம்மையாரை ஒரு பாகத்து வைத்தருளி அவரும் தானுமாக அமர்ந்தருளி அத்தனைக்கும் அரிய நீ மிக இலகுவாக வந்து என் உள்ளத்தினுள்ளே புகவல்ல எம் பெருமானே தேன் உண்டு களித்திடும் வண்டுகள் பாடுகின்ற சோலைகள் சூழ்ந்த திருக்காளத்தி உள்ளாக இருந்த ஒளியே உன்னை அல்லால் இனி ஒன்றும் உணரேன்.

உணர்தல் என்பது நினைத்தல் அல்லது சிந்தித்தல். ஏதும் நினைப்பது உண்டாகில் அது உன்னை அன்றி வேறு எதை நினைப்பேன். இதுகாறும் நினைத்தது எல்லாம் போதும். நீ காளத்தி உள்ளும் உண்டு என் உள்ளும் ஒளியாக உண்டு. 9

## காரூ ரும்பொழில்சூழ் கணநாதன்எங் காளத்தியுள்
## ஆரா இன்னமுதை அணிநாவலா ரூரன்சொன்ன
## சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினபோய்ப்
## பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப் பொன்றிலரே.

மேகங்கள் வந்து படியும் படியாக உயர்ந்த சோலை சூழ்ந்த கணங்கட்கெல்லாம் நாயகனுகியிருந்து காளத்தி உள்ளாக இருந்த தெவிட்டாத இன் அமுதத்தை சிவனை அழகிய திருநாவலூரில் அவதரித்த நம்பியாரூரன் சொன்ன சிறப்புக்களே இயல்பில் பெருகும் செந்தமிழ்களை செப்புவார்கள் வினை யாவும் நீங்கிப் போய் என்றும் விட்டு நீங்காத வான உலகத்தைப் பெறுவார்கள். ஒரு பிழையையும் அவர்கள் அடைய மாட்டார்கள். 10

கோபத்தில் மனைவி மக்கள் எல்லார்க்கும் அடி. தடை பண்ணச் சென்ற தாய்க்கும் தான் அதுகள் என்ன செய்யும் பயத்தில் எழுந்தோடி கோயில் மண்டபத்தில் அன்று இரவு முழுவதும் தங்கி இருந்தனர். குருக்களின் கோபம் ஆற திரும்பி வந்தனர். வட்டிச் சுவாமி வாரியார் வனப் பெய்திய கோயில் இது.

## கோவிலில் மனைவிக்கு அடி

ஆனைக்கோட்டையில் ஓர் பிள்ளையார் கோவில் குருக்கள் இருக்கிருர் இவர் புங்குடு தீவைச் சேர்ந்தவர். இவரும் தனது கோவிலில் சுவாமி சன்நிதியை மறைத்தே தனது மகனுக்கு மணவறை வைத்து பூநூல் கல்யாணம் செய்தவர். கோவிலில் கலியாணம் கூசாது செய்பவர், நாள் நட்சத்திரம் கூட இவர்க்கு தேவையில்லை.

இவருடைய மனைவியை கோவில் உள்வீதியில் வைத்தே அடிப்பார். பலரும் காணும்படி நடக்கும். அடித்த அடிதாங்காது மனைவி தனது தகப்பன் வீட்டிற்கு ஓடவள் பின்னர் ஐயர்சாமம் சாமமாககார் பிடித்துக் கூட்டிடிக் கொண்டு வந்தவர்.

இவருடைய மகன் தெருவால் சயிக்கிலில் ஓடும் போது மாலு மாலு சுருங்கனிக்க மாலுப் பாட்டுப் பாடி ஓடி மகிழ்வர். இவருடைய மகள் சயிக்கிள் ஓடும் அது ஆரை என்ருலும் முன்னல் எத்திக் கொண்டு ஓடும் ஓடும் போது வழியால் போவாரை இடித்துக் கொண்டோடும்.

இவர் தமிழர் கூட்ணியின் பிரதம குருவாவர். இவர் தமிழ் விழாவில் உயிர் நீத்த சிலரின் ஞாபக தூண்கள் உடைந்தன உடையாதனவற்றிற்கு அபிஷேகம் செய்தவர். அடுத்து தமிழ் நாடு கிடைத்தபின் கூட்டணியினர் எங்கள் நாட்டு பிரதம குருவாவர் என செல்வநாயகத்தின் ஞாபகார்த்த தூணிலும் இந்த ஐயருக்கு பெரிய சிலைகட்டுவார்கள் என நம்புகிருேம்.

## தேருக்குச் சென்ற ஆறுமுகசுவாமியை விளம்பரவிழாவிற்குஇடைநிறுத்தினர்

இன்னுமொரு கோவிலில் கலியாணம் செய்யும் குருக்கள் நீர்வேலியில் உள்ளவர். அவர் கோவிலில் இரவிலும் கூசாது கலியாணம் செய்வார். அவர் தனது கோயிலிற்கு புதுத்தேர் செய்ய ஒரு திருப்பணிச்சபை வைத்தார் அதில் பல பண்டிதர் ஆசிரியர் பலரும் அங்கம் கொண்டனர். அத் தேருக்கு 4 இலட்சத்திற்கு மேல் காசு தேவையாம். தேவையை பூர்த்தி செய்ய கேட்டு வாங்க முடியாமல் போயதோ என்னவோ தெரியாது குருக்களும் பண்டிதர்களும் பணம் சேகரிக்க விளம்பரம் செய்ய விரும்பினர். அதற்கு ஒரு பாராட்டுவிழாவாக அந்த விளம்பரத்தைச் செய்ய விரும்பினர். சிலரை விளம்பரப் படுத்தினல் காசு கூடக் கொடுப்பார்கள் என நினைந்தனரோ தெரியாது அவர்கள் தேர்த் திருப்பணி விளம்பர விழாவிற்கு ஓர் நூல் வெளியீடு செய்ய எத்தனித்தனர்: அந்த வருடத் தேர்த்திருவிழாவே தேய தான நாள் என நினைந்தனர். அப்பொழுது அந்தப் பகுதி காரியாதிகாரி (உதவி அரசாங்க அதிபர்) அவரை அழைத்து தலமை தாங்க வைப்பது என்பது முடிவு.

ஐயோ என்ன மாதிரி நடந்தது தெரியுமோ! தேருக்கு எழுந்தருள ஆறுமுக சுவாமியை வசந்தமண்டப பூசை முடித்து உள் வீதி வலம் வந்து வெளிக் கோபுர வாய்தலால் கொண்டு வந்து நிற்பாட்டித் தான் விளம்பர விழா நடந்தது.

தேரைத் தரிசித்திட ஏராளமான மக்கள் குழுமி இருந்தனர். முன் மண்டபத்தில் நிறுத்தப்பட்டது சுவாமி. மக்களும் நின்றபடியே தான், டி. ஆர். ஓ. அழைக்கப்பட்டார் மாலை சூட்டப்பட்டார். வணக்கம் செய்யப்பட்டார். தலைமை உரை பேசும்படி கேட்கப்பட்டார். அவர் ஏதோ பேசினர். நானும் நன்று கேட்டேன். அவர் கி. வா. ஜெகந்நாதனைப் போற்றிப் புகழ்ந்து கி. பி. நூற்ருண்டுபோல் கி. வா.விற்கும் நூற்ருண்டு சகாப்தம் வைக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டது எனது காதூடு வந்து மனதில் நன்கு பதிந்தது, கூடுதலான நேரம் பேசியதால் நின்ற மக்கள் கால் உளைய வேதனைப்பட்டனர். ஐயோ பாதகா! இப்படி ஏன் மினைக் கெடுத்துகிருய் என்று செவிக்குச்செவி, வாய்க்கு வாய் முணு முணுத்தது காணக்கூடியதாக இருந்தது.

பின்னர் பண்டிதர் ஒருவர் தேருக்குப் பணம் கொடுப்பாரை மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். ஒரு மணித்தியாலத்திற்கு மேல் தேருக்குச் செல்லும் சாமி தடைப் படுத்தி நிறுத்தி வைக்கப்பட்டபின் ஒருவாறு பாவம் அந்தச் சுவாமி தேருக்குப் போயது!

## தூய்மையான தொண்டின் மூலமே அருள்வரும் என்கிறது ஈசஉபநிடதம்

வேதாந்தி எனப்படுபவர் தன்னில் தன்னைத் தானுக உணர்பவர் பூரண அறிவு சொரூபமாக இருப்பவர். பூரண துறவியாகவும் வேதாந்தி அமைய வேண்டும். இவ்வாறு ஈச உபநிடதத்திற்கு முன்னுரை பகரவந்த சங்கராச் சாரியார் குறிப்பிடுகின்ருர். மேலும் அவர்

ஈச உபநிடதத்தில் கூறப் படும் மந்திரங்கள் கிரியா பாகங்களில் கூறலாகாது. ஏனெனில் ஈச உபநிடதத்தின் மந்திரங்கள் ஆத்மாவின் உண்மை இயல்பினை எடுத்து மொழிவன இந்த ஆத்மாவின் உண்மை இயல்பு உணரலை கிரியா பாக மூலம் பெறல் அரிது. எவ்வாறு எனில் ஆத்மா தூயது. பாவமில்லாதது. இரண்டற்றது அகப் பொருளாவது. வேறென்றுடன் கலப்பிலாதது. என்றும் உள்ளது. நித்தியமாவது ஆனதினல் அதன் பற்றிய அறிவு கிரியையுடன் சம்மந்தப் படு மேல் மாறு [illegible] ளும்,

ஆதலினல் ஈச உபநிடதத்தின் மந்திரங்கள் கிரியா பாகங்களில் கூறப்படலாகாது. மேலும் ஆத்மா மேலே விபரிக்கப் பட்டது போல் கிரிய பாகங்களுடன் தொடர்பு படுத்த முடியாது. ஏனெனில் ஆத்மா என்பது சென்று அடையப்படும் பொருள் அல்ல. அல்லது உண்டாக்கப் படும் பொருள் அல்ல. அல்லது தூய்மைப் படுத்தப் பட்டு மாற்றி அமைக்கப்பட்டு [illegible] வருவிக்கப் [illegible] பொருளல்ல. எவ்வாறெனில் ஆத்மா செய்யப் படுவான் அல்லது அனுபவித்து ஆனந்திப்பதான இயல்பிலும் அது இல்லை.

கிரியா பாகங்கள் நூல்களில் சொல்லப்பட்டு இருப்பன யாதின் பொருட்டாக இருந்தால் உலக பக்களின் மனோ நிலையின் பொருட்டாக எல்லாம். ஆத்மாவின் நிலையில் அணுகிச் சொல்வாராது இயல்பில் ஆத்மாவின் பல்வேறு வடிவம் வழிப் படும் நிலை ஆனந்தம் தூய்மை இல்லாமை ாவத்தின் செய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்சளின் பெருக்கம் இவை போன்ற ஏனைய நிலைகளுக்கு அமையவே ஆத்மீக இயல்பில் கிரியா பாகங்கள் உண்டு.

ஆத்மீக இயல்பில் யார் யார் கிரியைகளைச் செய்ய வேண்டும் யார் செய்ய வேண்டியதில்லை எனத் தீர்மானித்தால் ஒரு கிரியையின் பயனை விருப்புவான் அதைப் புரிந்து அந்தக் கிரியை மூலம் இந்த உலகில் காணப்படும் இன்பங்கள் உதாரணமாக பிராமண வாழ்வில் உள்ளனவும் அல்லாது இவ்வுலகில் வேண்டாது பின்னர் இந்த உடலம் விட்டு அவ்வுலகில் (வ்ானம்) அனுபவிக்கப் படுவதாய் உள்ளனவுமாகும். இது மட்டன்றி பிராமணரானவர் பெறும் ஆத்மீக இன்பத் துறையில் நான் இரு பிறப்பு அடைந்தேன் எவ்வாறெனில் அறியாமை என்னும் குருட்டினில் நீங்கியும் புலை கொலை ஆதிக்கம் என்னும் புன்நெறிப்படும் பின்தங்கிய நிலையில் நின்று நீக்கி ன்னைத்தியாக வாழ்விற்கு உரியவனுககி நல் நிலைப்பட வேண்டும் என்பவனுலும் கிரியைகள் செயப்படலாகும்.

ஆனுதினுலே ஈச உபநிடத்ததின் மந்திரங்கள் ஆத்மாவின் உண்மை விளக்கம் களை தெரிவிப்பதால் அதன் மூலம் ஆத்மாவைப் பற்றிய இயற்கை அறியாமையை நீக்கிவிடுகின்றன. இதுவன்றி இன்னமும் ஈச உபநிடத மந்திரங்களை ஓதினுல் ஆத்மாவிடத்து ஏகப்பட்ட தனிமையை எங்களிடம் உண்டாக்கி விடுகின்றனது.

இந்த ஒரு ஏகமான இயல்பின் சாதனையால் நாங்கள்எங்களிடம் எழுகின்ற கவலை சம்சாரக்கடலில் மூழ்கும் துயரங்களை வேருடன் களையலாம்.

நூல்களும் அவை குறிக்கும் குறிக்கோளாய் பொருளுக்கும் உள்ள தொடர்பு நூல்கள் அடையவேண்டிய குறிக்கோளின் எல்லையை அடையச்செய்வன. உடுத்து நூல் அறிவு உண்மைப் பொருளை நிலைபெற வழி காட்டுவன. நூல்களின் நோக்கமாவது அல்லது நூல்களின் பயனுவது அவை ஒருவரை ஆத்துமாவின் இயல்பு பற்றிய பூரண அறிவை வளர்க்கின்றதேயாகும். அதனுல் ஆத்மாவிற்கு அப்பாலான பிரமத்தை உணர்ந்து அந்த உணர்வுமூலம் கவலை மயலகம் ஆகியவற்றைப் போக்கவே யாகும். கவலை மயக்கம் ஆதியன யாவும் அறியாமையின் விளைவே இந்பொழுது நாம் மந்திரங்களை எடுத்து சுருக்கமாக விளக்குவோம், இவ்வாறு ஸ்ரீ சங்கராசாரியர் ஈச உபநிடதத்தின் முன்னுரையாக எடுத்துக் கூறுகின்ருர்.

## ஈச உபநிடத தோத்திரம்

ஓம் பூரணம். அதுவே பூரணம். இவை முழுதும் பூரணம். இந்தப் பூரணம் முன்னுன பூரணத்தின் வழியாக எழுந்தது. எப்பொழுது இந்தப் பூரணம் முன்னுன பூரணத்தில் ஒடுங்குகின்றதோ பின்னர் மிகுதியாக நிலவி நிற்பது பூரணமே.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

## முதலாவது மந்திரம்

1. இவை எல்லாம் எப்பொருளாக இந்த மாறுபடும் உலகில் இருக்கும் அவை எல்லாம் ஓர் கடவுளால் மூடப்பட்டுள்ளன. உனது ஆத்மாவை (உன்னை) பூரண துறவால் காப்பிட்டுக்கெகாள், காவல்செய்து கொள். எவர் ஒருவருடைய பொருளுக்கும் ஆசைப்படாதே!

## இரண்டாவது மந்திரம்

2. ஒரு மனிதன் நூறு வயதுவரையும் வாழ விரும்புவானுகில் அவன் ஏதோ நற்கருமம் செய்தபடியே இருக்கவேண்டும். உனது நிலையில் நீயும் அத்தகைய எண்ணத்தைப் பெற்று உன்னை ஒரு மனிதனுக மதிப்பாயாயின் உனக்கும் மேற்சொல்லிய நற்கருமம் (சிவதொண்டு) புரிதலே நியமமாகக்கொண்டால் அன்றி இதை விட வேறு எந்த வகையாலும் உன்னிடம் பிற செயல்கள் பற்றிக்கொள்வதை உன்னுல் நீக்கமுடியாது.

## மூன்ருவது மந்திரம்

3. உண்யையாக அசுரருடைய உலகங்கள் முழுவதும் குருடான இருட்டில் தங்கி உளது. இதனுலே இந்த அசுரர் இறந்தபின் பெரும் துயரத்தில் துன்புறுவார்கள். உண்மையில் அசுரர்கள் தங்கள் ஆத்மாவைத் தாங்களே கொலை செய்வார்கள்.

குறிப்பு;— பொய், கபடம், களவு, கொலை, வீம்பு இவை நிரம்பியவர் அசுரர்கள். இவை உடையார்க்கு சிவதொண்டு செய்யும் வாய்ப்பு ஒருநாளும் வராது. வந்தாலும் பிறரைத் துன்புறுத்தலாகவே அவர் தொண்டு வரும். ஒலிபெருக்கியிற் அடித்தல் 33 குண்டம் என்று பொய் சொல்லி ஏமாற்றிப் பணம் பறித்துப் பூசைசெய்தல் இவை யாவும்அசுரர் வழி. கோயிலில் கலியாணமும் அசுரர் வழி. உண்மையில் ஒளி உடைய ஆத்மா எல்லா உயிரினங்களிலும் இருந்தாலும் இந்தப் பாதகர்கள் ஒருபோதும் உண்மை ஒளியான ஆத்மாவை அறியார்கள் என்றதால் ஆத்ம கொலைஞர் என அசுரரைக் குறிப்பிட்டார்.

## நாலாவது மந்திரம்

4; போக்கும் வரவும் புணர்வும் இலாத கடவுள் ஆத்மா தளர்விலாதது. தன் நிலையில் குலைவிலாதது. மனதிலும் பார்க்க வேகம் உடையது, தேவர்கள் அதனை சென்று அடைய முடியாதபடி அது யார்க்கும் எப்பொழுதும் முன்னுகச் சென்றுகொண்டிருப்பது. அது நிலைபெற்று இருப்பதுபோல் காணப்படினும் ஓடிச் சென்றிடும் எல்லார்க்கும் முன்னுக ஓடிக்கொண்டிருப்பது, ஏனெனில் ஆத்மா வாயு உலகில் உள்ள எல்லாச் செயலிற்கும் பங்காக நின்று நடைபெறச் செய்வது.

குறிப்பு:— ஆத்மா சிவன் மனதிலும் நுணுக்கமானது. மனம் நினைக்கும் வேகத்திலும் அது வேகம் மிகுந்தது. ஆதலில் அது மனதிற்கு எட்டொணுதது. இதனுல் மாணிக்கவாசகரும் ''நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே'' என்ருர். வாயுவே உலகை இயங்கச் செய்வது. வாயு கடவுளாவது. பத்து வாயுக்கள் எங்கள் உடம்பை இயங்கச்செய்வன. இந்த வாயுக்களே எல்லா உலகங்களையும் இயங்கச் செய்வன. உலகங்கள் யாவும் ஓர் அதி தெய்வமான தேவரை முன்கொண்டன, அவர்கள் மிக வேகமுடன் சென்றபடி இருப்பார்கள். இவர்களது வேகங்க[illegible] சிவன் (ஆத்மா) [illegible]ணம் இருக்கிறது, அதனுல் எல்லாச் செயலும் சிவன் செயல் என்பர் பெரியோர். காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் கூத்தே சிவனின் செயல், அதை யார் அறிய முடியும்? உண்மைத்தொண்டு மூலமும் பத்தியாலும் இதனைப் பெரியோர் அறிவார்கள்.

## ஐந்தாவது மந்திரம்

5. ஆத்மா சென்றுகொண்டிருக்கின்றதோ அல்லது செல்லாது நிலையாக உள்ளதோ! அது தூரமாக உள்ளது. அதேபோன்று மிகவும் அணிமையாக உள்ளது. இங்குள்ள எல்லாவற்றிலும் உள்ளாக உள்ளது. இங்குள்ள எல்லாவற்றிலும் புறமாக உள்ளது,

குறிப்பு;— மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே! புறத்தார்க்குச் சேயோனே! சேயாய் நணியானே! ஏத்த மறைந்திருந்தாய் என்று இப்படிப் பலவாருக எமது நாயன்மார்கள் எவ்வளவு சிறப்பாக மொழிந்தனர். இவைகளை நீவிர் மதித்தீரோ?

# திருக்கேதீச்சர நிர்வாகம் உண்மைச் சிவநெறிக்கு அவமானம்

சில நாட்களுக்கு முன்னர் வைதிக நெறிப்படி ஒழுகி கிரியைகளை நன்கு பத்தி சிரத்தையுடன் செய்யும் நவாலியைச் சேர்ந்த ஓர் குருக்களைக் கண்டேன். அவருடன் பல கதையும் கதைத்து வரும் போது ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சொன்னுர்; ''நான் சில நாட்களுக்கு முன் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவரைக் கண்டேன். அப்போது அவர் என்னை நோக்கி என்ன குருக்கள் நாங்கள் சிவ பூசைக்கு மகாநாடு நடத்தினேம். உங்கட்கும் அழைப்பிதழ் அனுப்பினேம். நீங்கள் மட்டும் வரவில்லை. பெரும் பாலும் பெரிய பெரிய குருக்கள் எல்லாரும் வந்தார். இந்தியாவில் உள்ளாரும் கலந்து கொண்டார்கள் என்ருர். அப்பொழுது எனது மனதை ஒருவாறு அடக்கிக் கொண்டு பல சோலிக்காறன் நான் வர சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டது குறை விளங்காதையுங்கோ எனக் கூறினேன். உண்மையில் பாரும் வசி பூசைக்கு மகாநாடு என்றவுடன் என் மனம் வெந்தது! அவரை கேட்கப்பார்த்தனுன் தின்ற மாட்டிறைச்சி அரைச் செமியலில் இருக்கோ அல்லது முழுதும் செமித்தாய் விட்டதோ எனக் கேட்க எண்ணினுன் பிறகும் மனக் கொதிப்பை அடக்கிக் கொண்டு நோகாமல் பதில் சொன்னேன்'' என்ருர் குருக்கள்.

சிவ பூசை என்ருல் அது ஒரு தகுந்த ஆசாரியனை அடைந்து அவன் சொற்படி ஒழுகி மிகத் தூய்மையுடன் செய்ய வேண்டிய கருமம். இதை விட்டிட்டு எங்கடை நாய்களும் ஏதோ திருக்கேதீச்சரம் திருப்பணிச்சபை என்ருல் பெரிய சாமான் என்று தற்புகழ்ச்சிக்காக ஓடிப் போகுதுகள் என்ருர்.

நான் சொன்னேன் ஐயா அறிந்தவர் போல் நடித்து தாறுமாருக நடந்து சைவ நெறியின் புண்ணிய நெறிகளை புனித நெறிகளைப் பாழ்படுத்தி வரும் ஒரு திருப்பணிச் சபை ஒன்று என்ருல் அது திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையே, திருநாவுக்கரசர் 'மனத்தினுர் மாண்பலா நெறிகள் மேலே கனைப்பரால்' என்றதும் 'புறத்து அடிமை' என்ற வகையில் ஏதும் ஒரு நிலை திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார்க்கே பொருந்தும்.

பல தந்திரம் பல பொய் எல்லாம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சொல்ல வல்லவர் திருப்பணிச் சபையில் உளர்,

இந்தவகை உடையவரைநாம்இவர் ஓர் தொண்டர் என்னுது மாண்பலா செயல்மேல் கனைக்கும்மிண்டர் எனலாம். அருமந்த பாடல் பெற்ற புண்ணிய தலத்தை இவர்கள் எடுத்து வைத்துக் கொண்டு அதில் படுகிற தில்லுமுல்லுகள் அநந்தம் ஐயோ இவர்களுக்கு என்ன சிவ பூசை. மகாநாடு

முதலாவதாக சரியை நெறியில் ஒழுங்காக ஒழுகி அதாவது கோயில் வீதி கூட்டல் மெழுகல் பூவெடுத்தல் மாலை கட்டல் விளக்கேற்றல் சிவனடியார் சேவை [illegible] சிவன் அடிமைத் தொண்டில் ஒழுகி இப்படி பல துறைளிலும் நடந்து வைதிக நெறி ஒழுகி பின்னர் அல்லவோ தக்க குருவை அடைந்து கிரியா பாகத்து இறங்கி சிவ பூசை செய்திட வழி தேட வேண்டும். உங்களுக்கு தானே ஐயா தெரியும். சைவநெறியில் இந்த சிவபூசை நெறி இரகசியமாவதும் தெய்வீக மாவதும் என்பது. இதற்கு மகாநாடு என்ருல் அதன் மகத்துவத்தைக் குறைப்பதேயாகும் நாம் என்ன செய்யலாம்? ஆரிடம் இதைப்பற்றிச் சொல்வது. நல்ல நூல் சேலை இருக்க வோயில் சாறி அச்சிட்ட பூக்களுடன் இருந்தால் அதை விரும்பும் பெண்கள் போல இன்று திருக்கேதீச்சர நிர்வாகம் சிவநெறியில் பெரும் பழுதுகளை விளைவிக்கின்றது எனக் கூறினேன்.

பெரியோர்களே! திருக்கேதிச்சரநிர்வாகம் சிவநெறியில் தாங்கமுடியாது பெருகுகின்ற அவமானமாகும். அங்கு கொழும்பில் இருந்து முற்றிலும் மிலேச்ச பண்புகளில் ஊறி முற்றிலும் மிலேச்சர் வழியில் வாழ்ந்து பலபொய் பல கபடம்பல தந்திரம் இவற்றைச் செய்தவர்கள் அந்த அநியாயங்களில் நின்றும் இளைப்பாறி இப்பொழுது தாம் சிவநெறி வளர்க்கிருேம் என்ற போர்வையில் திருக்கேதீச்சரம் வரும் போது திருநீறு பூசி மற்றும் படி அவமானச் செயல் செய்து சிவநெறியில் விழா மகாநாடு என்ற வகையால் மாண்பற்ற நெறிகளில் கனைக்கிருர்கள்,

திருக்கேதீச்சர நிர்வாகத்தில் உள்ளார் பெரும்பாலும் சிவநெறியின் தொண்டு செய்பவர் அன்று. அல்லது உண்மைத் தொண்டு செய்யப்போவாரை மதிப்பவர் அன்று. பெரும்பாலும் காரியதரிசி தான் நினைத்ததே சட்டம் எனத் தொழிற்படுகின்ருர். இவர் தயவில்தான் தலைவர் உட்பட பல சபை அங்கத்தவரும் திருப்பணிச் சபையில் இருக்கலாம்,

திருப்பணிச்சபைக் கூட்டம் ஒழுங்காக நடைபெறுவதில்லை. என்ன நடக்கின்றது என்று சில திருப்பணிச் சபை அங்கத்தவர்க்கே தெரியாது. பண நிலை பற்றிக் கவலைகள் தெரிவிக்கப் படுகின்றன.

கோயில் ஓர் தனித்த 'சுப்பர் மார்க்கட்'போல வாசலில் அருச்சனை முதல் பல சாமானும் வேண்டக் கூடிய இடமாக உளது. கோயில் செல்வார் அதை ஒரு 'பிக்னிக்' ஆகக் கருதுகின்றனர். கொழும்பிலுள்ளார்க்கு அது ஒரு 'ரூறிஸ்ற் சென்றர்' எனலாம்.

சிவராத்திரி விழா என்பது அடுத்த வருடத்திற்கு வேண்டிய பணம் சேகரிக்கும் விழா, அங்கு கூடுவார் சிவராத்திரிக்குரிய புனித நிலையுடன் வருவதில்லை, கோயில் நிர்வாகமே அன்றைய புனித நாளை தன் நிர்வாகத்திற்குப் பணம் சேகரிக்க விளம்பரம் செம்யும் நாளாக வைத்துக்கொண்டனர். நாம் இங்கு ஏதும் மிகையாகவோ, பொய்யாகவோ எழுதவில்லை. கோயில் வாசலிலே காரியதரிசி அவரின் பரிவார ஊழியர் கும்பிடச் செல்வாருடன் சண்டையிடற்கு வாய்த்த இடமாக வந்துளது என்ருல் இனி வேறு என் சொல்லலாம்?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு கைக்கோளர் அல்லது செங்குந்தர் கொடிச்சிலை கொடுக்க வந்த வரலாறு

சிவபெருமான் திருநடனமியற்றிய இடம் தில்லைச் சிதம்பரம். இந்த இடத்தைத் தக்கண கைலாயம் என்றும் கூறுவார்கள், இந்தத் தில்லைச் சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்குப் பூசை செய்யும் பாக்கியம் சந்தான குரவரில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் என்னும் அந்தணருக்குக் கிடைத்தது. சந்தான குரவரில் நால்வர் இருந்தனர். அவர் முறையே மெய்கண்ட தேவர் அருணந்தி சிவாச்சாரியார் மறைஞானசம்பந்த சிவாச்சாரியார் உமாபதி சிவாச்சாரியார் அல்லது கொற்றவன்குடி முதலி,

தினமும் மத்தியானப் பூசை பகல் 12 மணிக்கு முடித்துக் கொண்டு உமாபதி சிவாச்சாரியார் தனது உதவியாட்களுடன் கடும் வெயிலில் தம் வீடு நோக்கிச் செல்வார். ஒரு நாள் பகற் பூசை காண வந்த அந்நாட்டு மன்னன் திரியம்பகச் சோழன் இதைக் கண்ணுற்றான். கருணையுள்ள அந்த மன்னன் அன்று தொட்டு உமாபதி சிவாச்சாரியார் கானலில் தவியாது வீடு செல்ல சிவிகை தீவர்த்தி முதலான விருதுகளைக் கொடுத்து வீட்டுக்கு போகப் பணித்தருளினான் அன்று தொடக்கம் இவ்வைபவம் தினமும் நடந்து வந்தது. சிவபக்தியிலும் குரு பக்தியிலும் அடியார் பக்தியிலும் சிறந்து விளங்கினார் உமாபதி சிவாச்சாரியார். இவர் மறைஞானசம்பந்த சிவாச்சாரியாரின் சீடராவார்.

உமாபதிசிவாச்சாரியாருக்கு இந்நாட்டு மன்னன திரியம்பகச் சோழன் இவ்வரிசைகளை அவருக்குக் கொடுத்ததைக் கண்ணுற்ற பெண்ணாடகம் மறைஞானசம்பந்த சிவாச்சாரியார் ஒரு நாள் 'பட்ட கட்டையிற் பகற் குருடன் போகின்றான் பாருங்கள்' என்று குறிப்பாக சிலேடையாக கூறினார். இதன் கருத்து இறந்து பட்ட மரத்தினால் செய்யப்பட்டது சிவிகை அதைக் காவும் கொம்புத் தண்டும் அதே இறந்து பட்ட மரத்தினாலேயே செய்யப்பட்டது. பட்டப் பகலில் யாரும் தீவர்த்தி கொழுத்திக் கொண்டு போவார்களா? அப்படிச் செல்பவன் குருடனல்லாது வேறு யார்? உமாபதி சிவாச்சாரியார் ஓர் மகா மூடன். ஆடம்பரப் பிரியன் என எண்ணி தனது சீடனுக்கு ஞானம் பிறக்குமாறு இவர் இதைச் சொன்னார்.

இதனைக் கேட்ட உமாபதி சிவாச்சாரியார் அதன் ஆழமான ஞானக் கருத்தை விளங்கினார். அதாவது ஆன்மா உடலை விட்டுப் பிரிந்த பின்பு அவ்வுடலை விறகு கட்டையில் வைத்துத் தான் தீ மூட்டுவார்கள். இதை விளங்காது நானும் விறகு கட்டையில் ஏறிச் செல்கின்றேனே. ஆகையால் நான் உண்மையாகக் குருடனாய் விட்டேன். எனக்கேன் இந்த ஆடம்பரம் என்று நினைத்தார். ஞானசம்பந்தர் அவரது குரு. அவருடைய அதி தீவிர பக்குவத்தை உலகினர்க்கு வெளிப்படுத்துவான் வேண்டி தமது சிவிகையை விட்டிறங்கி மறைஞான சம்பந்தரை அஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிக்கும் பொருட்டு சென்றார். தான் சொன்னதை ஏழனமாகக் கருதி தன்னை ஏதோ ஊறு செய்திட உமாபதி வருகிறான் என்று எண்ணிய ஞானசம்பந்தர் ஓடத் தொடங்கினார், உமாபதியும் அவர் பின்னே ஓடினார். ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டே சென்றார்கள். பிரமாவும் விஷ்ணுவும் சிவபெருமானைத் தேடிக் களைத்தது போல் இவர்கள் இருவரும் வெகுவாகக் களைத்து விட்டார்கள்.

பாரகம் புகலும் நல்லைப் பண்புடைத் தொழிலென்றெண்ணி
காருகம் வினைமேற் கொண்ட கரிசலார் வீதி சென்று
சீரகம் புகுநூல் பாவில் செலுத்திய கூழின் சேடம்
தாருமிவ்விடத்தாமென்று கரத்தினில் வாங்கியுண்டார்.

பொழிப்பு - உலகமே நல்ல பண்புள்ள தொழிலென்று புகழ நெசவுத் தொழிலையே தாம் கொண்டவர்களாகிய கைக்கோளர் அல்லது செங்குந்தர் தெருவுக்குச் சென்று நல்ல நூலினால் செய்த பாவிற்குப் போட்ட கஞ்சிக் கூழின் மிச்சம் இருந்தால் தாருங்கள் என்று கேட்டு இரண்டு கைகளையும் நீட்டி மண்டைக் கையிலே குடித்தார்.

பாவோடிக் கொண்டிருந்த செங்குந்தர் வீதியை மறைஞான சம்பந்தர் நண்ணி விட்டார். தாகம் தாங்க முடியா நிலையில் அங்கு நின்ற செங்குந்தர்களை தாக சாந்திக்கு ஏதும் தரச் சொன்னார். செங்குந்தர்கள் பாத்தோயும் கஞ்சிக் கூழை விட வேறு ஒன்றும் இல்லை எனறார்கள். பரவாயில்லை. அதையாகிலும் தாருங்கள் என்றார். செங்குந்தர்கள் பாத்தோயும் கூழை சட்டியால் அள்ளி வார்க்க அதை ஞானசம்பந்தராகிய பிராமணன் இருகைகளையும் நீட்டி மண்டைக் கையில் குடித்தார். குருபக்தி கொண்ட உமாபதி சிவாச்சாரியாராகிய பிராமணர் சம்பந்தரின் கைகளால் நிறைந்து வழிந்து அவருடைய முழங்கைகளினால் ஊற்றுண்ட கூழை தமதிரு கைகளாலும் ஏந்திக் குடித்தார்.

இச்செயற்கருஞ் செய்கையை அறிந்த மற்றைத் தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதியின் செய்கையை நற்குணராது அவரைப் பழித்தனர். அரசனுக்கும் முறையிட்டனர். நடேசப் பெருமானுக்குப் பூசை செய்ய லாயக்கற்றவர் என்று முறையிட்டனர். இதைக் கேட்டவுடன் திரியமபகச் சோழன் உமாமதி சிவாச்சாரியாரை அன்றுமுதல் சிதம்பரம் நடராஜப் பெருமானுக்குப் பூசை செய்வதிலிருந்தும் நிறுத்தினான். மன்னனால் அவமானப் படுத்தப்பட்ட உமாபதியார் செங்குந்தர் வாழும் கொற்றவன் குடியில் சென்று அஞ்ஞாதவாசம் செய்தார். நடராஜப் பெருமானிடம் முறையிட்டுக் கொண்டு அவரே தஞ்சமென்று வாழ்ந்து வந்தார். இதனாலேயே அவருக்கு கொற்றவன்குடி முதலி என்னும் பெயர் வந்தது. அவருடைய சமாதி கொற்றவன் குடியில் தான் அமைக்கப் பட்டிருக்கின்றது.

மார்கழி மாதம் சிதம்பரத்தில் உற்சவ காலம் கிட்டியது. தில்லைவாழ் அந்தணரால் கொடுக்கப்பட்ட கொடிச்சீலை அரைக் கம்பத்தில் ஏறி அறுந்து விழுந்தது. பலமுறை ஏற்றியும் பயனில்லாது போயது. அரைக் கம்பத்தில் ஏறி அறுந்த நிலைபோலும் இன்றும் பெரியோர் மறைந்தால் எங்கும் அரைக் கம்பத்தில் கொடி பறக்க விடுகின்றார்கள். ஏதோ மூர்த்தி காரியம் பிழைத்து விட்டதென்று அஞ்சி அரசனும் தில்லைவாழ் அந்ணர்களும் நடராசப் பெருமானிடம் பணிந்து தம் பிழைகளை பொறுக்குமாறு விண்ணப்பித்தார்கள். உடனே அசரீரி வாக்கு உமாபதி சிவாச்சாரிார் பூசகராகி அவர் பருகிய கூழைக் கொடுத்த செங்குந்தர் நெசவு செய்து அவர்களால் கொடுக்கும் கொடிச்சீலையே நமக்குப் பிரீதி" என்று கூறிற்று.

இதைக் கேட்ட தில்லைவாழ் அந்தணர்களும் அரசனும் ஏங்கி தங்கள் பிழைகளைப் பொறுக்கும்படி மன்னிப்புக் கேட்டு கொற்றவன் குடிக்குச் சென்று உமாபதி சிவாச்சாரியாரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவரைப் பூசகராக ஏற்கும்படி அரசன் வேண்டிக் கொண்டான்.

கோக்களை மின்னனுரை குலத்தினில் தவத்நின் வேத
மாக்களைச் சிசுவைக் கொண்றான் செய்யநாள் நியமந்தனை ஆசான்
ஆக்கமதா பித்தான் பாவம் அனைத்தும் செங்குந்தர் வீதி
தேக்கிடப் பிச்சை வாங்கி உண்டிடத் தீருமன்றே.

பொழிப்பு: செங்குந்தர் வீதியில் செங்குந்தரிடம் பிச்சை வாங்கி சாப்பிபிட்டால் சகல பாவங்களும் தீரும்.

மேற்படி பாட்டிற் கிணங்க திரியம்பகச் சோழ மன்னன் உமாபதியை வேண்ட அவரை பல விருதுகளுடனும் கொற்றவன் குடியிலிருந்து அழைத்து வந்து செங்குந்தர் வீதிக்கு கூடிட கொடி ஆலவட்டம் வாத்தியங்கள் அனுப்பி அவர்களால் நெசவு செய்யப்பட்ட கொடிச் சீலையை கொண்டு வந்து கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான். அதற்கிணங்க செங்குந்தர் தில்லைச் சிதம்பரத்திற்கு கொடிச்சீலை கொடுத்தனர். இன்றும் கொடுத்து வருகின்றனர் உமாபதி சிவாச்சாரியார் கயிறு கொண்டிழுக்காமல் 'கொடிக்கவி' என்னும் பிரபந்தத்தைப் பாட செங்குந்தர் கொடுத்த கொடி வழுவிலாது தானாகவே ஏறிற்று. சகல கோவில்களுக்கும் அன்று தொட்டு செங்குந்தரே கொடிச் சீலை கொடுத்து வந்தனர். அவர்கள் இல்லாத ஊர்களில் அவர்களால் நெசவு செய்யப்பட்ட கொடிச் சீலையே ஏற்றப்பட்டன.

இலங்கையிலும் பல கோவில்களில் இவர்களாலேயே முன்பெல்லாம் கொடிச் சீலை கொடுக்கப்பட்டு வந்தது. உதாரணம் வல்லிபுர ஆழ்வார் கோவில் ஒட்டிசுட்டான் சிவன் கோவில் யாக்கரைப் பிள்ளையார் கோவில் பட்டக்களப்பில ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் மாமாங்கேஸ்வரர்கோவில்முதலியன

முருகப் பெருமானின் சகோதரர்களாகியும் படைவீரர்களாகியும் உடைய நவவீரருடைய வமசா வழியினராகிய செங்குந்தர்கள் பாவமற்ற தொழிலெனக் கருதி திருவள்ளுவர் போல் நெசவுத் தொழிலையே கைக்கொண்டார்கள். காலம் செல்லச் செல்ல அவர்களுடைய பொருளாதாரம் இறக்குமதிப் புடைவைகளால் பாதிக்கப்பட்டமையால் அவர்கள் நெசவுத் தொழிலைக் கைவிட்டு வேறு தொழில்களில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள், எனினும் இன்னும் சில சில குடும்பங்கள் தங்கள் குலத் தொழிலை விடாது கஷ்ட நிலையிலும் நடாத்திக் கொண்டுதானிருக்கிறார்கள், அவர்கள் வழிவந்த கைக்கோளர் அல்லது செங்குத்தர்களே இன்றும் நல்லையம்பதியில் கொடிச் சீலை கொடுத்து வருகிறார்கள். கொடிச் சீலை தினத்தன்று நல்லூர்க் கந்தசாமி கோவிலிருந்து மேள வாத்தியம் குடை முதலியன செங்குந்தர் வீதிக்கு கொடிச் சீலை கொண்டு வர அனுப்பப் படுகின்றது.

## சைவ சமயவிழாவில் வீச்சு ரொட்டி

ஆசிரியர்
சந்திர தீபம்.
ஐயா!

சந்திர தீபத்தின் 12 10 79 வெளியீட்டில் பிரசுரமான சரஸ்வதி பூசையில் வீச்சு ரொட்டி என்ற விடயம் வாசித்தேன். முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் மானிப்பாய் மகளிர் ஆசிரியை ஒருவர், மாணவி அவலட்சணமாக வீபூதி பூசியதை கண்டித்தமைக்கு ஆசிரியை மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையேல் தீக் குளிக்கப் போவதாக கூறிய சைவப் பெரியார் இம்முறை ஏன் தீக்குளிக்காமல் இருக்கிறார். அல்லது ரொட்டி விநியோகம் செய்த மாணவரின் தந்தையார் சிவ தொண்டர், பிறவிச் சைவமென்பதாலோ பேசாமல் இருக்கிறார்: தங்களுக்கு தாங்களே சைவப் பெரியரென பட்டம் சூட்டிக் கொள்ளும் சில அசைவ பெரியார்கள் [illegible]களின் புண்ணில் [illegible] நகைப்பதை தவிர்த்து உண்மையில் செயல்பட்டாலென்ன மானிப்பாய் இந்து சமய விருத்திச் சபையில் தலைவர் பதவியும் கௌரவ காரியதரிசி பதவியும், தனதிகாரிப் பதவியும் நிர்வாகத்தில் உள்ளவர்களும் உண்மையில் சைவத்தை அனுஸ்டிக்கிறார்களா? மாமிசம் இல்லாமல் இருக்க முடியாத சைவப் பெரியாாகளும் இருக்கின்றார்கள்: உலகத்தை திருத்த முன்பு மானிப்பாய் இநது சமய விருத்திச் சபையில் உள்ள நிருவாகத்தினர் அனைவரும் தீட்சை பெற்று சுத்த சைவராக தத்தமது குடும்பங்களைத் திருத்திக் சொண்டு பொது மக்களுக்கு உபதேசம் செய்ய முற்பட்டால் மிகவும் வரவேற்பாய் இருக்கும்:

இவைசரியாக செயற்படாது இருக்குமேயானல் அடுத்து சரஸ்வதி பூசையில் வீச்சு ரொட்டியுடன் மாமிசமும் ஏன் படைக்க மாட்டார்கள்.

சமயா சமய தலைவர்கள் சமயத் தலைவர்களாக இருந்தால் வரவேற்கத்தக்கது.

சு தியகரசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்பெண்களே சிவன் திருநீற்றை வளர்த்திட முன்வாரீர்

திருஞானசம்பந்த சுவாமிகள் மதுரைக்குச் செல்கின்றார். ஏன் அப்படிச் செல்ல வேண்டும் என்றால் பாண்டி நாட்டில் அன்று சைவநெறிக்கு நேர்ந்துள்ள இன்னல்களைத் தீர்த்து பாண்டி நாட்டில் சிவ நெறி தழைத்திட வகை செய்வதற்கு திருவுள்ளமாகச் செல்கின்றார்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரச சுவாமிகளுடன் கூடி பல சிவ தலங்களை சென்று தரிசித்து வருகின்றார். ஒருகாலமுமே அவர்கள் தமதுசிவ தல வழிபாட்டு யாத்திரையில் ஒரு தலத்துடன் நிறுத்தி கொண்டு வேறு தலத்துக்கு செல்வது இல்லை. ஒழுங்காக ஒவ்வொரு சிவாலயங்களையும் பாடி பணிந்து செல்பவர். ஒரு தலத்தில் தங்கி இருப்பதும் அல்லது அதைத் தாண்டி மறு தலம் செல்வதும் சிவனருள் தெளிந்த வகையாக நடைபெறுமே அன்றி தம் மனம் போன போக்கில் அவர்கள் போவது இல்லை. அவர்களுடைய யாத்திரையின் புனித நிலையை எழுதி காட்ட இங்கு எனக்கு முடியாது. தவத்திஞல் பெற்ற கூர்மையான அறிவு கொண்டு இவற்றை உணரலாம் அன்றி சரி பிழை பேசித் திரியும் மனத்திஞல் அளக்க முடியாது.

இப்படியாக இருவரும் சோழ நாட்டில் எம்பிரான் தங்கியிருக்கும் ஆலயங்களை சென்று வழிபடும் முறையில் திருமறைக்காடு (வேதாரணியம்) என்னும் தலத்தில் சென்று தங்கி இருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற நேரத்தில் 'தான் பாண்டி நாட்டில் சமணர்களுடைய கொடுமைகள் நேர்தலை சகிக்க மாட்டாது வாழ்ந்து கொண்டு இருந்த எங்கள் தெய்வம் மங்கையர்க்கரசியாரும் செல்ல விடுத்த தூதுவர்கள் சென்று திருஞானசம்பந்தரை பணிகின்றார்கள். அவர்கள் சுவாமிகளிடம் பாண்டி நாட்டில் சிவநெறிக்கு அன்று நிலவிய துயர நிலைகளை எடுத்து சொல்லாமல் சொல்லி விடுகிறார்.

சிவனருளால் அதை உணர்ந்த திருஞானசம்பந்த சுவாமிகள் உடனே பாண்டி நாடு தாம் செல்ல வேண்டும். அங்குற்ற பழுதுகளை நீக்க வேண்டும். மீண்டும் சிவநெறி விளங்கச் செய்ய வேண்டும் என துணிகின்றார்.

அந்த துணிவால் திருமறைகாட்டு சிவன் முன் சென்று திருநாவுக்கரசருடன் வழிபட்டு அருள் பெற்று இருவருமாக மீண்டு கோபுர வாய்தலிலூடாக திரும்பி வரும் போது தான் திருநாவுக்கரசருக்கு தாம் பாண்டி நாடு செல்வதை சம்பந்தர் தெரிவிக்கின்றார்.

அது கேட்ட அப்பர் பாண்டி நாட்டில் சமணர்களுடைய கொடுமையை உணர்ந்தவராய் சமணர்களிடம் தான் பட்ட துயரங்களை உணர்ந்து அங்கு செல்லும் சம்பந்த சுவாமிகளுக்கு அத்தகையன நேர்ந்து விடுமோ என்ற உள்ள அசைவினுல் எழுந்த அச்சத்தால் சமணர்கள் பொல்லாதவர்கள் தீங்கு செய்ய கூசாதவர்கள் ஆதலினுல் அங்கு செல்வதை தாம் விரும்பவில்லை என கூறி தடுத்து மொழிகின்றார்.

அது கேட்ட சம்பந்த சுவாமிகள் அவரை நோக்கி உண்மை நெறி நின்று எம்பெருமானை வழிபடுவோமாகில் ஒரு காலமும் எமக்கு பழுது வராது இது துணிபு. நாம் அடியவர் பழுதில்லாது உண்மை வழி ஒழுகி வழிபடும் அடியவர் நாம். ஆகையால் எதற்கும் அஞ்ச வேண்டியது இல்லை என்று உண்மை நின்ற சிவனடியார்க்கு எத்தீங்கும் மிகை எவராலும் துன்பம் செய்ய முடியாது என்பதை வேயுறு தோளி பங்கன் என்னும் தேவாரத்தை பாடி அருளுகின்றார்.

உலகியல் நிலைபற்றி உள்ளம் அசைவு கொண்ட அப்பருடைய சித்தம் தெளிந்து கொண்டது. தாமும் கூட வருவதாக சொல்கின்ற அப்பரை சம்பந்தப் பெருமான் நோக்கி சோழ நாட்டில் சிவநெறி மிகவும் சிறந்து இருக்கிறது.

ஆதலாலே இங்கு குளிர்ச்சியுடன் நல்ல மனே நிலை உண்டு. நான் அங்கு செல்கின்றேன் எனக் கூறி விட்டு தாம் புறப்பட்டு பாண்டி நாடு செல்கின்றார்.

கருணை நிறைந்த வெண்ணீற்றின் பாற்கடல் பாண்டி நாடு வழிக் கொண்டு செல்வது போல் திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகை மீது பாண்டி நாடு செல்கின்றார். பாண்டி நாடு சென்று அதன் தலைநகர் மதுரையை அணுகுகின்றார். மதுரையை அணுகிக் கொண்டதும் வானளாவிய சோலைகளும் மாடங்களும் கோபுரங்களும் நிறைந்த அந் நகரைக் கண்ணுற்று எம்பிரான் அமர்ந்த திருவாலவாய்க் கோவில் எங்குள்ளது எனக் கேட்கின்றார். கேட்கும் அவர்க்கு அருகிருந்தார் உயர்ந்த திருக்கோபுரமுடன விளங்கும் ஆலயத்தை காண்பித்து அதுவே திருவாலவாய் என மொழிகின்றனர்.

திருவாலவாயை நோக்கி எம் குருமணியை பாட எடுக்கும் அவர்க்கு பூாண்டிமா தேவி மங்கையர்க்கரசி யாருடைய பணியே அகக்கண் முன் தோற்றுகின்றது. உடனே அவவுடைய நாமத்தை முன்வைத்தே பாடல் தொடங்கப் படுகின்றது. அப்பாடலில் என் சொல்கிறார் என்றால் மங்கையர்க் கரசி எனத் தொடங்கி அப்பதிகத்து அவவுடைய சிறப்பெல்லா வற்றையும் சொல்லிப் பாடுகின்றார். அங்கு பாடுகின்ற போது அவரைச் சிறப்பிக்கின்ற நேரத்து அவர்பணியே குறிப்பிடுகின்றார். ஐந்து திருப்பாடல்களில் அவவுடைய பணியும் மற்ற ஐந்து திருப்பாடல்களில் குலச்சிறை நாயனர் வழிபாடும் அவர் குணமும் சிறப்பித்து பாடியருளினர். அங்கே அவ்வாறு பாடிவிட்டு பதினெராவது பாடலான திருக்கடைக் காப்பில் பன்நலம் புணரும் பாண்டிமாதேவி குலச்சிறை என்னும் இவர் பணியும் அந்நலம் பெறும சீர் ஆலவாய் ஈசன் திருவடி ஆங்கவை போற்றி என்று கூறுகின்றார்.

சைவப் பெண்களினமே முன்புள்ள தாய்மார்கள் இன்று உங்களுக்குள்ள கல்வி வசதியைப் போல் வசதி பெறமுடியாத காலத்திலும் பார்க்க இன்று பல கல்வி வசதி பெற்று பட்டதாரிகளாய் பேராசிரியர்களாய் விளங்குகின்றீர்கள், உங்களுக்கு அதிகமாக விளக்கி நான் கூற வேண்டியதில்லை. பன் நலம் புணரும் பாண்டிமா தேவி என்பதன் அர்த்தம் உங்களுக்கு நன்ருக அவை யாது என விளங்கும்.

நலம் என்றால் என்ன? பன்லம் என்றால் என்ன? அவை புணரும் என்றால் என்ன? இந்த நலன்களுடன் பணிசெய்தல் என்றால் என்ன? இவை யாவும் விளங்க வேண்டும். திருவாலவாய் ஈசனை சிறப்பிக்கும் சம்பந்தப் பெருமான் எத்தனையோ சிறப்புக்கள் உடையவராக அவர் இருக்கவும் பாண்டிமா தேவி குலச்சிறை எனும் இவர் பணியும் அந் நலம் பெறும் சீர் ஆலவாய் ஈசன் என குறிப்பிடுகின்ற போது அதன் கருத்தை விளங்குவதானுல் இவர் இருவரும் பணியும் சிறப்புடையார் திருவாலவாய்க் கடவுள் என்று பொருள் கொள்ளப் படுகின்றது. பணியும் அந்நலம் அப்பெருமான் பெற்றனர் என்றது சிறப்பு. திருவாலவாய் ஈசனை வேறு மக்கள் எல்லாரும் பணிகின்றார்கள் ஆனுல் இவா பணி தலைப் ஈசனபெற்றது பெரும் சிறப்பாகின்றது. இந்த ஒரு உண்மையை சைவப் பெணகளாய நீங்கள் அத்தனை பேரும் உணர வேண்டும். பாண்டிமாதேவி சென்று பணிதல் ஈசனின் சிறப்பாக கொள்ளப் பெறுமல் பாண்டிமாதேவி எத்துணைச் சிறப்புடையவராக இருந்திருப்பார் [illegible] யுங்கள்! [illegible] பன்நலம் புணரும் பாண்டிமாதேவி என முன்ன ராக சொல்லி விட்டார்.

ஆகவே நலங்கள் எல்லாவற்றுக்கும் ஓர் சைவப் பெண்ணிற்கு தலை சிறந்தது யாது. முதற்கண் அது பக்தி. அடுத்தது பதி சேவை (கணவனுடைய சேவை) இவை இரண்டும் ஓர் சைவப் பெண்ணிற்கு இரு கண்கள் போல்வன. அடுத்து இவையன்றி எத்தனையோ நலன்கள் உண்டு. அவை தான் வெஞ்சொற் பேசாமை புறன் கூறுமை விருந்தோம்பல் பிற உயிர் மீது இரக்கம் அடக்கம் மிருதுவான செயல்களையே செய்தல் எதிலும் கபடம் அற்று இருத்தல் அவாவின்மை முதலிய பலவாகும். இவைகளை நன்கு சிந்தித்தால் இவை எல்லாம் தாம் உடையவரோ என்று சைவப் பெண்கள் தயவு செய்து சிந்திக்கட்டும்.

பாண்டிமாதேவியை சிறப்பிக்கும் சம்பந்தர் அவ ஈசனுக்கு செய்யும் சிறப்புக்கள் சில சொல்லுகின்றார். அவற்றைப் பற்றி எந்த ஒரு சைவப் பெண்ணும் சிந்தித்தல் நலம். முதற் கண் அந்தப் பெண்ணைச் சொல்லுகின்ற போது இன்னுருடைய மகள் வளவர்கோன் பாவை (சோழ அரசருடைய புத்திரி) என்றும் பங்கயச் செல்வி என்றும் அதாவது மகாலச்சுமி போல்பவள் என்று முதற் பாடலில் சொல்லி பணி செய்து நாள் தோறும் பரவினுள் என்கின்றார். ஆம் இதனை எடுத்துக் கொண்டால் முதலாவது இன்னுருடைய புத்திரி என்றபோது தந்தை சோழ அரசனின் சைவக் குல ஒழுக்கம் பிரதிபலிக்கின்றது. அடுத்ததில் மகாலக்குமிக்கு ஒப்பாள் என பிரதிபலிக்கின்றது. ஆகவே குல ஒழுக்கத்திற்கு இலக்குமியாக அவ இருந்திருக்கிறுள். ஆம் சுருங்கச் சொன்னுல் சைவ குலத்திற்கு ஓர் விளக்கு அவள்.

தீபத்தை லக்குமி என்கின்றோம். தீபம் என் செய்கின்றது ஒளியைப் பரப்பி இருளைப் போக்குகின்றது. ஆன தன்மையினுலே சைவத்தில் ஆங்காங்கு முளைக்கின்ற இருளுக்கு பாண்டிமாதேவி ஒளியானுள். சைவப் பெண்கள் என்று நாம் குறிப்பிடுகின்ற போது திருநீறு பூசுகின்ற அத்தனை பேரையும் நாம் குறிப்பிடுகின்றோம். திருநீறு பூசுவதின் அர்த்தமென்ன; சிவன் அணியும் பொருள் அல்லவோ என நாம் கருதுகின்றோம். சிவ நெறியின் சாதனம் என்றல்லவோ நாம் கருத வேண்டும். ஆன தன்மையினுலே துருநீற்றை அணிகின்ற நாங்கள் நீள நிலவி வந்த பல நலன்களையும் கை விடுத்து வேற்று வழிச் சேரலாமா? வேறு கொள்கைகளை புகுத்தலாமா? திருநீற்றின் கொள்கைக்கு முரணுன வழி சிந்திக்கலாமா? தயவு செய்து சிந்தியுங்கள்

இதனை ஒரு பாடலில் சிவன் திருநீறறினை வளர்க்கும் பந்தணை விரலாள் பாண்டிமாதேவி பணிசெய என சம்பந்தர் கூறுகின்றார். சிவன் திருநீற்றினை எப்படி வளர்ப்பது. ஆக பாண்டிமாதேவிக்கு மட்டும் பொருந்தி ஏனைய பெண்கட்கு இது பொருந்தாவகை என நினைக்கலாமோ? பாண்டிமாதேவி வளர்த்தது காணும். நாம் வளர்க்க வேண்டியதில்லை எங்கட்கு அது வேண்டியதில்லை ஏதோ ஒரு மேடை கிடைத்தால் இதைப் பற்றி நாம் இரண்டு வார்த்தை பேசினுல் காணும். அதோடு சைவம் நற்கட்டும் என்று நினைக்கலாமா?

இன்று பல மேடைப் பேச்சுக்களினுல் சைவப் பெண்ணினம் என்ன ஆகிவிட்டது. எவ்வளவு தூரம் உயர்ந்த சீலங்களினின்றும் வழுவி விட்டனர். தாம் நினைத்த படியே திரு நீற்றின் நெறிகளை மாற்றி வேறு வேறு துறைகளில் இறங்கி விட்டனர் என்பது வெளிப்படையாகத் தெரியாதா?

[illegible] அரசாங்கங்களினுல் [illegible] வரப்பட்ட சட்டங்களை வைத்து இன்று பெண்ணினம் என்ன ஆகிவிட்டது, சிவன் திருநீற்றினை வளர்க்கும் பங்கயச் செல்வி ஆகினார்களா? அல்லது சிவன் திருநீற்றினை மாசு படுத்தும் அமங்கலச் செல்விகள் ஆகி விட்டார்களா தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.

உங்களுடைய உணவு உடை பேச்சு உங்கள் குலத்தின் பிள்ளைகள் அவர்களுடைய உடை அவர்களுடைய உணவு அவர்களுடைய பேச்சு அவர்களுடைய நடத்தை இன்று என்னுகி உள்ளது? தயவு செய்து சிந்தியுங்கள். உண்மையாக நீங்கள் பெற்ற பிள்ளைகள் இன்று திருநீற்றை மதிக்கிறுரா? அல்லது திரு நீற்றை நெற்றி நிறைய பூசுகிறுரா? திருநீறு அணிவது கௌரவக் குறைவு என உங்கள் பிள்ளைகள் நினைக்கவில்லையா? திருநீற்றிலும் பார்க்க தங்களுடைய சடையும் மீசையும் காற்சட்டையுமே பெரிதென எண்ணவில்லையா?

பாண்டிமாதேவி சிவன் திருநீற்றினை வளர்த்தாள் என்றால் அதன் அர்த்தம் என்ன? பாண்டிமாதேவியின் வரலாற்றை எடுத்துக்கொள்வோம். பாண்டிமாதேவியின் கணவன் முற்றிலும் ஓர் சமணன். திருநீறு கண்டாலே பிடிக்காது கண்ட தோஷத்திற்காக கண் கழுவுபவன். அப்படியான ஒரு கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்து அவனை முற்றிலும் மாற்றி சிவ நெறிக்குரியவனுக்கி திருநீறு அணியப் பண்ணியது யாருடைய செயல்? சம்பந்தர் செய்தாரா பாண்டிமாதேவி மங்கயர்க்கரசி செய்தாரா? சிந்தித்துப் பாருங்கள், பாண்டிமாதேவி இல்லாதிருந்தால் சம்பந்தரால் அது செய்திருக்க முடியுமா? சம்பந்தர் செய்ய வேண்டி வந்ததிற்கு காரணம் பாண்டிமாதேவியே ஆதலினுலே சிவன் திருநீற்றினை வளர்க்கும் பாண்டிமாதேவி என்றார் சம்பந்தர்.

இதனைச் சிந்தையில் கொண்டால் பெண்கள் குலத்தின் நலமுடைய ஒழுக்கத்தால் தான் சைவம் வளர்த்திட முடியும். இதைத் தயை கூர்ந்து சிந்தியுங்கள்,

உலகிற் பிறந்த பெண்கள் யாவற்றிலும் ஓர் சைவப் பெண்ணுகப் பிறவி எடுப்பது புண்ணிய வசம் எனவே சொல்வோம்; அத்தகைய சைவப்பெண்கள் தமது வாழ்வை தூய்மையுடன் நடத்துவது என்றால் அது மிக்க கடினமானது. ஆனுல் துயரம் பல பெருகினும் சிந்தை கலங்கி கண்ணீர் வடிந்திட வந்திடினும் தாம் மேற்கொண்ட சிவநெறியின் உறுதியைகைவிடாது ஒழுகும் உத்தமியின் உள்ளநினைவு உலகை மாற்றி அமைக்கும் என்பதை மறவாதீர்கள்.

சிவன் திருநீற்றை வளர்ப்பது என்றால் மேடைப் பேச்சு கருத்தரங்கு மூலம் செய்யலாமோ எனின் அது ஒரு காலமும் சிறவாது. மேடைப் பேச்சும் ஊத்தைக் கூடையும் சரி. கருத்தரங்கு வைக்கப் போனுல் அது தரித்திரமாக சுய விளம்பரத்தின் நிலையமாக நிச்சயம் மாறும். இன்று மேடைப் பேச்சு சுய விளம்பரத்திற்கு வசதியாக சைவ சீலங்களை கெடுத்து விட்டது. ஒழுக்கம் தான் நல் நிலையை வருவிக்கும். ஒழுகமுடியாதாரின் வெறும் பேச்சு ஏதும் பயனில்லை,

கிட்டத்தட்ட கடந்த நூறு ஆண்டு காலத்திற்கு மேலாக நம நாட்டில் மேடைப் பேச்சிற்கு குறைவே இல்லை, கருத்தரங்கிற்கு குறைவே இல்லை. ஆனுல் இவை எல்லாம் நடந்தும் எமது சைவ சமுதாயம் திருநீறு கூட ஒழுங்காகப் பூசத் தயங்கு கின்றது? இல்லை என்பீரா? இது உண்மையில் சிவன் நீறுவளர்ப்பா? தயவு செய்து சிந்தியுங்கள்.

பாண்டிமா தேவியை சம்மந்தர் இன்னுமொரு பதிகத்து ஓர் சைவப் பெண்ணின் இயல்பு இப்படியெரத்திருக்கும் எனக் காட்டுகின்றார். முத்தின் தாழ் வடமும் சந்தனக் குழம்பும் நீறும் தன்மார்பினில் முயங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி ஆர்கின்ற பாண்டிமா தேவி என்கின்றார் இந்த நிலையில் திருநீறு சந்தனம் முத்துடன் இணைந்த உருத்திராக்க மாலை இவை பாண்டிமா தேவியின் மேனியில் துலங்க; உள்ளம் பத்தியாக இருக்கின்றது! இந்த கோலத்துடன் திருவால வாயில் பணிசெய்து போற்றுகின்றாள் எனச் சம்பந்தர் சொல்லும் போது பாண்டிமா தேவி மங்கையர்க் கரசியாரின் கோல நிலையை தயவு செய்து ஒவ்வொரு சைவப் பெண்ணும் சிந்தித்துப் பாருங்கள்.

அடுத்து பத்தியார்கின்ற பாண்டிமாதேவி பாங் கொடு பணிசெய்து பரவ என்ற போது பாங் கொடு பணிசெய்தல் யாது என்பதேகேள்வி. ஆலயத்து பெண்கட்கு பணிகள்பிருது வாயதே பாங்காவன, மிருது என்றது பூக்கொய்தல் மாலைகட்டல் வீதி கூட்டல் மெழுகல் பாடல் போற்றுதல் இவையாவும் இவையன்றி கோயில் செல்லும் போது வெறுங் கையுடன் செல்லாது பால் தயிர் நெய் சோசலய கோமயம் பழம் இவை ஏந்திச் செல்லல் ஆனவையாகும்.

இதை விடுத்து எந்த ஒரு உத்தமியான சைவப் பெண்ணும் மேடை விரும்பாள், மேடைப் பேச்சு சைவப் பெண்கள் நிலையில் ஓர் அபசாரத்தை என்றோ ஒரு நாள் கூட்டிவைக்கும்; நாம் இதை பொறுமை உள்ளத்துடன் அல்லது குரோத அடக்குமுறை உள்ளத் துடன் சொல்லவில்லை. அப்படி தயவு செய்து எண்ணுதீர். மேடையில் நின்ற பெண்கள் என் ஆவாள் என்பதை காலம் காண்பிக்கும்.

மிலேச்ச நாகரீகத்தின் வழி ஒழுகும் சில பெண்கள் மேடை ஏறி பல சொற்பொழிவு நிகழ்த்தி சைவ நெறியில் ஒழுக வேண்டிய சிலங்களைக் கெடுத்துக் கொண்டனர். அவர்களை மிலேச்ச வழி ஒழுகும் பேதையர் பலர் கௌரவித்து ஊக்குவித்து சைவப் பெண்கள் இனத்து பெரும் அபசாரத்தை விளைவித்துள்ளனர். இத்தகைய அபசாரங்களை தென் இந்திய மடங்களும் கி. வா. போன்ற பேதைப் பிராமணனும் செய்து விட்டார்கள், நாம் என் செய்யலாம். இவையாவும் நாயன்மார் காட்டிய அறத்தின் வழியும் அல்ல. நன்மை தரும் அருள் நெறியும் அல்ல

சுருங்கச் சொல்லப் போனல் பாங்கான பணிக்கு தற்புகழ்ச்சி பெரும் கேடு விளைவிக்கும். குற்றேவல் செய்வது பிறர் மதிப்பைப் பெறற்கு என்ற எண்ணமே இருக்கக் கூடாது. உண்மையாக சைவ நெறிப்படி வாழக் கூடிய எந்தப் பெண்ணுலும் தம் சித்தத்து நினைந்ததைப் பெறலாம். அதற்கு ஐயம் வேண்டியதில்லை. அதற்கு ஒரு நிபந்தனை மட்டும் சொல்வேன். அதாவது மேடைதேர் இழுப்பு சுவாமி காவல் இவை போன்ற பேதமை உடைய முரட்டுச் செயலில் ஈடுபடாதீர்கள்.

மங்கையர்க் கரசியார் முரடான இந்த வழி ஒழுகி தாம் நினைந்ததை அடையவில்லை, காரைக்கால் அம்மை திலகவதியார் திரு நீலகண்டநாயனர் மனைவியார் யர்வருமே அடக்கம் பணிவு தொண்டு என்ற நல் நிலையில் நின்று அருள் பெற்றவர்.

உதாரணமாக திரு நீலகண்ட நாயனரின் மனைவியாரை எடுத்துக் கொள்வோம்: அவரின் கணவர் பரத்தை பெண்களின் உறவுகொண்டார் என்பது மனைவியார்க்குத் தெரிந்தது. இது தவறு என்பது அம்மைக்கு விளங்கியது. ஆதலினல் கணவனை அந்த அழுக்கில் நின்றும் நீக்க எண்ணினுள்

அதற்காக தாம் செவ்வனே சைவ சிலமுடன் ஒழுகிவருபவள். சிந்தையில் கணவன் பேதமையை மாற்ற எண்ணி ஓர் நாள் கணவன் தன்னைத் தீண்ட வரும் போது 'தீண்டுவீர் ஆகில் எம்மைத் திரு நீலகண்டம் என ஆணையிட்டு அவர் பால் அன்றி வேறு பெண்களிடம் கொண்ட இச்சையே பேதிக்கப் பண்ணி விடுகின்றாள்.

தீங்குகளை நீக்குவது திருநீல கண்டம், அதோ இறைவனை திரு நீல கண்டம் எனப் போற்றுவீர். உம்மைக் கெடுக்கும் பெண்இச்சை என்னும் நஞ்சை போக்கமாட்டீரோ என்ற வகையே தீண்டுவீராகில் திருநீலகண்டம் என ஆணையிட்டார். அந்த அம்மையின் ஒரு வார்த்தை எப்படி நாயனரை அன்றுடன் இந்த இச்சையில் நீக்கிட ஏதுவாகியது. திருநாவுக்கரசருடைய வாழ்வை தூய்மை படுத்தியதற்கு காரணம் யார்? திலகவதியார். இதை எல்லாம் சைவப் பெண் இனமே தயவு செய்து உங்கள் சிந்தையில் கொள்ளுங்கள்.

ஆதலினல் இன்று நமது சைவப் பெண்களின் நடத்தைகளை உற்று நோக்குமிடத்து இன்று சைவ சமுதாயம் சிவநெறியின் உயர்ந்த நெறிகளைப் பேண முடியாது கீழ்மையான பல செயல்களில் பொழுது போக்கி வருவதும்; ஆலயங்களில் அன்பு நெறியும் அருள் நெறியும் நீங்கி இருள் நெறியான கலியாணம் மேடைக் கூத்து வில்லிசை பெருகுவதற்குக் காரணமாகதாமே அறிந்தும் அறியாமையாலும் தமது நடத்தையால் வருவித்துக் கொண்டனர் என்பது உண்மை.

இதற்கு காரணம் சைவப் பெண்களின் விளக்கக்குறைவே.

தமது பிள்ளைகள் அலங்கோலமான திருவிழாக்களை கோயிலில் செய்திட அது பார்த்து தமது பிள்ளையின் சாமர்த்தியத்தை மகிழ்ந்து கொண்டு இருக்கும் தாய்மார் பலர் உண்டு. தனது பிள்ளைக்கு கலியாணம் செய்ய கோவிலடிதான் வேண்டுமென்று அடம் பிடித்து கோவிலில் பெரும் பாதக நிலையை உருவாக்கிய தாய்மார் பலர் உண்டு

இத்தகைய தாய்மார் சற்று சிந்தித்திருந்தால் எமது சமயநிலை எவ்வளவு முன்னேறி இருக்கும். கோவிலை ஏதும் ஓர் மதிப்பிற்குரிய இடமெனக் கருதாது கோவிலில் கூடித்தமது வீட்டுக்கதை பேசும் பெணகள் எல்லாக் கோயிலிலும் நிறைய உண்டு. இவையெல்லாம் முற்றிலும் பாங்கான பணியும் அல்ல வழியும் அல்ல. உங்கள் பிள்ளைகளின் தீய நடத்தைக்கு கோவில்களில் செய்யும் மதிப்பற்ற செயலிற்கு நீவிரேகாரணமும்வழிகாட்டியுமாவீர்.

பெண்களிடத்தில் ஒரு அருவருக்கத்தக்க நிலை பெருகி வருகிறது; அதாவது தவற்றைச் சுட்டிக் காண்பித்தால் உடன் கோபம் வரும். ஆதலினலே தயவு செய்து சைவப் பெணகள் இனமே உங்களது நிலையை நாம் மேற்காட்டிய ஆதாரங்களை நன்கு வாசித்துத் தெளிந்து சைவ நெறி தழைத்தோங்கவெனில் உங்களது தெளிவுடைய நல்நடத்தைதான் காரணமாக அமையும் என்பதை நம்புங்கள் சிவன் திருநீற்றினை வளர்க்கும் அப்பணியில் நாயன்மார் காலத்திருந்த நன்நெறிகள் தழைத்திட எனில் உங்கள் கையில் தான் அப்பணி தங்கி உள்ளது என்பதை மிகு பணிவுடன் தெரிவிக்கின்றேன்.

எல்லாம் வல்ல இறைவனின் ஆசியுடன் தாங்களும் கருமமாற்றி இத்தகைய சீரிய தொண்டுகளை மேலும் நடைமுறைப்படுத்துவீர்களாக.

தங்கள் பத்திரிகை நீடு வாழ்ந்து நிலையான சேவை செய்ய என்றும் என் நல்லாசிகள்.

இப்படிக்கு
பிரம்ம ஸ்ரீ சிவகடாட்சக் குருக்கள்

# பணம் படைத்தவர் சமயத்தை
## சுயவிளம்பரத்தின் ஏறுதுறையாக பாவித்தலை சந்திரதீபம் எதிர்க்கிறது

ம சி சிதம்பரப்பிள்ளை
காசிப்பிள்ளையார் கோவிலடி
தெல்லிப்பழை.

பேரன்பு மிக்க ஆசிரியர் அவர்கட்கு

பல்கோடி வணக்கம். தங்கள் கந்தபுராண நூல்களில் காதல் கொண்டு அவைகள் வெளிவரும் போது அந்நூல்களை விலைகொடுத்துப்பெற்று எம்அறிவை விருத்தி செய்ய முடிந்தது.

இப்போது தாங்கள் வேறுஒரு பெருந்துறையை நாடி சந்திர தீபம் என்ற வள்ளத்தில் பிரயாணம் செய்கின்றீர்கள். இடையிடை தங்கள் வள்ளத்தினல் இடறுரும் பிராணிகளின் மரணவஸ்தையைத் தங்கள் சக்திவாய்ந்த பேனமுனை எடுத்தியம்புகின்றது. சைவம் என்ற போர்வையினல் தங்களை மூடிக்கொண்டு வேடம் போட்டுப் பேயாட்டம் போடுவோரை அம்பலத்துக்குக் கொண்டு வந்து சுக்குவேருகக் கிழித்து விடுகின்றீர்கள். ஸ்ரீல ஸ்ரீ நாவலர் ஐயாவுக்குப்பின் இந்த அரும்தொண்டைச் செய்தவர்கள் இருந்தால் அவ்வாறுள்ளவர்களை எமக்குத்தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனல் அச்சம் என்றது இல்லாது உண்மை வழிநின்று சைவஉலகம் மேன்மை கொள்ள தாங்கள் தனித்து நின்று போராடும் பெரும்தர்மத்தை ஆண்டவன் தந்துள்ளான்.

திருஞான சம்மந்தப்பெருமான் சமணர்களை ஒழிக்க என்ன என்ன செய்தவரோ! அதேவழியில், ஆணவம், அகங்காரம், கௌரவம். புகழ் இவைகளால் உண்மையை மறைத்து அதர்மவழி செல்வோர்களை இனங்கண்டு தங்கள் பேன போராடிவதை செய்வதனைபார்க்கும் வாசகர்கள் ஒருவித ஆறுதல்கள் பெறுவார்கள். சுய விளம்பரத்துக்காகச் சமயம் ஒரு ஏறுதுறையாகப் பணம் படைத்தவர்கள் பாவிக்கின்றார்கள், இவர்களுக்கு உறுதுணைபுரியும் சில்லறைப் பசாசங்கள் பல. இவைகளையும் தங்கள் பேன, தேடிப் பிடித்து அம்பலத்துக்குக் கொண்டு வருகின்றீர்கள்.

திருமுறை, புராணம் முதலியவைகளை முறையாகப் படித்து சமயத் தொண்டு புரிவதனல் செய்பவரும் முன்னேறுவார்கள், சமயமும் வளரும் ஆலயமும் சிறக்கும், நாடும் செழிக்கும் இறைவனும் எம்மை சிறக்க வைப்பார்.

தங்கள் சிறந்த தொண்டுக்குப் பங்கம் இழைக்கும் மக்கள் தங்கள் சவக்குளியைத் தோண்டுகின்றார்கள் என்பதை அறிவார்கள்.

முதலியார் மகேசன் அவர்கள் கூறியதிறகிணங்க உண்மையை எடுத்துக்கூறுங்கள். எருமை என்று சொல்வதற்குப் பதிலாக 7 . 5 மை என்னுங்கள். ஔவைப் பிராட்டியார் வைதமாதிரி வைது தள்ளுங்கள்.

உண்மை வெல்லும். பேலிகள் தலை குனிவார்கள்

தங்கள் தொண்டுகள் வளரட்டும்!

அன்பு ம சி சி

# படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவிலா?
## எனக் குருக்கள் கேட்கிறார்.

மயிலணி சுன்னுகம்
26 12 79

ஆசிரியர்
சந்த்ரதீபம்
அன்புடையீர்.

தங்கள் பத்திரிகை சைவமக்களுக்கு மாத்திரமன்றி ஏனைய ஜீவராசிகளுக்கும் பெருந் தொண்டாற்றி வருவதை நாம் மனமார வாழ்த்துகின்றோம். தங்கள் பத்திரிகை பிராமணர் சமூகத்தைத் தவறுமிடத்துச் காட்டி வருகின்றது. கடந்த 24 12 79 (திங்கள்) அன்று சுன்னுகம் பகுதியில் உள்ள ஆலயங்கள் பலவற்றில் நிகழ்ந்துள்ள திருட்டுச் சம்பவங்கள் பற்றிய இரகசியத் தகவல்கள் வெளிவந்துள்ளன. மயிலிணி சிவன் கோவில் வசந்த மண்டபத்தில் இட்ட

பல நாவல்களும் கொக்கோமர்மச் சாஸ்திரப் புத்தகங்களும் (பாலியற் புத்தகங்கள்) பொலிசாரினல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் ஆகி நாட்டுக்கு நல் வழி காட்டும் இப் பிராமணர் சமூகம் செய்யும் சீரழிவுகளைத் தங்கள் பத்திரிகையின் மூலம் அம்பலப் படுத்தி அவர்கள் செய்த தவறுகள் மீண்டும் நடவாதிருக்க

# நல்லூரிலும் அந்தணர்கள் பேசுவன
## மன்மதலீலையின் வார்த்தைகள்

ஓம்
49 இராச வீதி,
நல்லூர்,

அன்புள்ள நல்லையா அவர்கட்கு,

சென்ற ஆயிலியத்திலன்று நல்லூர் உள்வீதியில் கும்பிட்டுக்கொண்டு வரும்போது நந்தவன மாடத்தில் வைத்திருக்கும் திருவடியையும் கும்பிட்டேன். அப்போது 12 மணிக்கு அண்மையாயிருக்கும். அந்த நேரம் சில பிராமணர்கள் அங்கு பூசை செய்பவர்கள், பஞ்சாலாத்தி, வேறு விளக்குகளை வைத்து தேய்த்து விளக்கிக் கொண்டிருந்து சல்லாபம் அடித்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் சில என் செவியில் விழுந்தன. '' என்னடா மடையா கதைக்கிறாய். நீ என்ன மன்மதக் குஞ்சா?'' இப்படிப் பட்ட வார்த்தைகள் கோவிலுக்குப் பூசைக்கு வந்த யாரோ மாதைப் பற்றித்தான் அவர்கள் கதைத்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அந்தப் பிராமணர்கள் நடுத்தர வயதுடையவராகக் காணப் பட்டார்கள். அதில் ஒருவரை எனக்கு நன்ருகத் தெரியும். அவருடைய மனைவி அவருடைய காரச் சாரதியுடன் யுடன் சில வருடங்களுக்கு முன்ஓடி விட்டாள். பின்பு ஏதோ ஓர் காரணத்தால் இறந்து விட்டாள் அவர் இப்போது வேறுவிவாகம் செய்திருக்கிறார்

உங்களன்பான,
வே சின்னத்துரை,

# முப்பத்தி மூன்றுகுண்டங்கள்போட்டு
## மீண்டும் மோசடிசெய்ய பிராமணர் எத்தனிப்பு

தம்பலகாமம் கோணேசர் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதாம் அதற்கு 33 குண்டம் போட்டு கும்பாபிஷேகமாம். பல அறிஞர் இவை தவறு என மொழிந்ததும் இந்த அடங்காத பிராமணர் இதைச் செய்யப் போகிறாராம். தீவுப் பகுதி மக்கள் சொன்னாலும் தெளிவு பெறார்கள் அதே நிலையில் தான் தம்பலகாம மக்களும் உள்ளாரோ தெரியாது. உண்மையில் இச் செயல் சைவநெறிக்கு அவமானமும் பேதைத் தனமும்.

இதை முன்னின்று நடத்தும் மொடேன் பிராமணர் பார்வைக்கு வந்த பெண்ணுடன் மன்மதலீலை புரிந்தவர் அவர் 33 குண்டமல்ல 303 குண்டத்திலும் பல லீலை புரிவார், அவரது கூட்டணிகளும் மது மங்கை விலாசத்தில் மிகச் சிறந்தவர் கோணேசர் நிர்வாகமே விடாதே பிடி எது அழிந்தாலும் உங்கள் 33 குண்டம் உங்களை பெரிசாய்க் காட்டும்! மோடேர்ண் நிலையில் நீங்களும் பாருங்கோ.

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கலிருக்கும் திரு வை நல்லையா அவர்களால் தமது சந்திரதீப அச்சகத்தில் பதித்து பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org